## தமிழ்நாடு

- தமிழகத்தில் உள்ள **கோயில் சிலைகள் மாயமான வழக்குகளை விசாரித்து வந்த** இரு நீதிபதிகள் கொண்ட சிறப்பு அமர்வை கலைத்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- தமிழகத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் உள்ள **அங்கீகரிக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வு தளங்களில் வாகனம் ஓட்டிக்காட்டி தேர்ச்சி பெறுவோருக்கு** மட்டுமே ஓட்டுநர் உரிமம் வழங்க வேண்டும் எனப் போக்குவரத்து ஆணையர் உத்தரவிட்டுள்ளார்.
- தமிழகத்தில் முதல் முறையாக **திருநங்கைகளுக்கான பல்நோக்கு சிகிச்சை மையம்,** சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் திறக்கப்பட்டுள்ளது.
- மாணவ-மாணவிகளின் பள்ளி இடைநிற்றலை தடுப்பதில் இந்தியாவிலேயே **தமிழ்நாடு முதல் இடத்தில்** உள்ளது.
- தமிழ்நாடு சுகாதார பணிகள் சீர்திருத்த திட்டத்தை அமல்படுத்த உலக வங்கி **28 கோடியே 70 லட்சம் டாலர் (ரூ.2,009 கோடி) கடன்** வழங்குகிறது.
- இதற்காக, **உலக வங்கி, மத்திய அரசு, தமிழக அரசு** ஆகியவற்றுக்கு இடையே டெல்லியில் முத்தரப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- தமிழகத்தில் கடைகள், தொழில், வணிக நிறுவனங்கள் **24 மணி நேரமும் திறந்து வைத்திருக்க** தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.
- சரக்கு மற்றும் சேவை வரி விவரங்களைச் சமர்ப்பிக்க **சென்னை மற்றும் கோவையில் இலவச சேவை மையம்** தொடங்கப்பட்டுள்ளது.
- சேலம் ஏ.வி.ஆர். ரவுண்டானா முதல் ராமகிருஷ்ணா சாலை வரை கட்டப்பட்டுள்ள **புதிய ஈரடுக்கு மேம்பாலத்தை** முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி திறந்து வைத்தார்.
- இது தமிழகத்திலேயே **மிக நீளமான ஈரடுக்கு நெடுஞ்சாலை** மேம்பாலமாகும். இதன் நீளம் **7.8 கிலோ மீட்டர்** ஆகும்.
- ஓட்டுநர் உரிமத்தில் முகவரி மாற்றம் செய்ய **தடையில்லா சான்று தேவையில்லை** என போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது.
- திருவாரூர் மாவட்டம், **திருத்துறைப் பூண்டியில் தேசிய நெல் திருவிழா** நடைபெற்றது.
- தமிழக தொல்லியல் துறை சார்பில் **கீழடியில் 5-வது கட்ட அகழாய்வு** 5 மாத தாமதத்துக்குப் பிறகு 10.06.19 அன்று தொடங்கியுள்ளது.
- புகைப்படம் எடுத்த **ஒரு மணி நேரத்தில் ஓட்டுநர் உரிமம் வழங்க வேண்டும்** என்று வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களுக்கு போக்குவரத்து ஆணையர் **சமயமூர்த்தி** உத்தரவிட்டுள்ளார்.
- சொத்து உரிமையாளர்கள், வாடகைதாரர்கள் சட்டம் மற்றும் இணையதளம் குறித்து **பொதுமக்கள் தங்கள் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்வதற்கு 1800 599 01234 என்ற இலவச தொலைபேசி எண்** ஒரு வாரத்துக்குள் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என்று வீட்டு வசதித் துறை செயலர் ச.கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
- சென்னை **எழும்பூர் ரயில் நிலைய** முகப்பில் பிரம்மாண்டமாக **100 அடி கொடி மரத்தில் தேசியக் கொடி** ஏற்றி வைக்கப்பட்டுள்ளது.
- விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் ரூ.6 ஆயிரம் வழங்கும், **'பிரதமர் விவசாயி ஆதரவு நிதி'**

TENKASI AKASH FRIENDS IAS ACADEMY

திட்டத்தின் கீழ் தமிழகத்தில் இதுவரை சுமார் **42லட்சம் விவசாயிகளுக்கு** 2 தவணைகளாக **ரூ.883 கோடி** வழங்கப்பட்டுள்ளது.

- கடந்த 2018-ம் ஆண்டுக்கான **பசுமை விருதுகளை** நீலகிரி மாவட்ட ஆட்சியர் **ஜெ.இன்னசன்ட் திவ்யா,** மதுரை மாவட்ட முன்னாள் ஆட்சியர் **கொ.வீரராகவ ராவ்** (தற்போது ராமநாதபுரம்), நெல்லை மாவட்ட முன்னாள் ஆட்சியர் **சந்தீப் நந்தூரி** (தற்போது தூத்துக்குடி) ஆகியோருக்கு முதல்வர் பழனிசாமி வழங்கினார்.
- ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களின் **தடை உத்தரவை சிறப்பாக செயல்படுத்த உறுதுணையாக இருந்ததற்காக** மண்டல ஒருங்கிணைப்பாளர்களான உணவு பாதுகாப்பு ஆணையர் **பெ.அமுதா,** நெல்லை மாவட்ட ஆட்சியர் **ஷில்பா பிரபாகர் சதீஷ்** ஆகியோருக்கு **சிறப்பு பசுமை விருதுகள்** வழங்கப்பட்டன.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் **ஒன்றாம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை படிக்கும் மாணவர்களுக்கு 'ஸ்மார்ட்' அட்டை வழங்கும்** திட்டத்தை தமிழக முதல்வர் பழனிசாமி தொடங்கி வைத்தார்.
- தில்லியில் இருந்தபடியே **தமிழ்நாட்டுக்கான மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் அனுமதி, நிதி** போன்றவற்றை பெறுவதற்கு **புதிய அதிகாரியை தமிழ்நாடு அரசு** நியமித்துள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை துணைச் செயலாளர் **சு.இராதாகிருஷ்ணன்** பொறுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தமிழகத்தின் 29 மாவட்டங்களில் இந்த நிதியாண்டில் **1,829 குடிமராமத்து பணிகளை மேற்கொள்ள ரூ.500 கோடிக்கு நிர்வாக ஒப்புதல்** வழங்கி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.
- கிராமப்புற பெண்களுக்கு டிஜிட்டல் நிதி ஒதுக்கீடு செய்வதற்கான ஒரு திட்டமான **'டிஜிட்டல் சாகி' "Digital Sakhi" - ஐ, L&T** நிதி சேவைகள் (LIFS) தமிழ்நாட்டிலுள்ள விழுப்புரம் மாவட்டத்தின் இரண்டு கிராமங்களில் தொடங்கியுள்ளது.
- நூற்றாண்டைக் கடந்து வானிலை சேவையாற்றி வரும் **நுங்கம்பாக்கம் வானிலை ஆய்வு மையத்துக்கு உலக அளவிலான அங்கீகாரத்தை** உலக வானிலை ஆய்வு நிறுவனம் வழங்கியுள்ளது.
- இந்தியாவில் **முதல்முறையாக 1792-ம் ஆண்டு சென்னை நுங்கம் பாக்கத்தில்** வானிலை ஆய்வு மையம் அமைக்கப்பட்டது.
- இம்மையம் **சுமார் 140 ஆண்டுகளுக்கும் மேலாக, வானிலை விவரங்களை ஒரு நாள்கூட தவறாது பதிவு செய்து,** ஆவணப்படுத்தி வருகிறது.
- மாநில தலைமை தகவல் ஆணையர் மற்றும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய தலைவர் ஆகியோரை தேர்வு செய்ய **ஓய்வு பெற்ற நீதிபதி எஸ்.ஆர்.சிங்கார வேலு தலைமையில்** குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- தமிழகத்தில் **நெகிழிப் பொருள்கள்** விற்பனை செய்தாலோ அல்லது பயன்படுத்தினாலோ **அபராதம் விதிக்கும் நடைமுறை** ஜூன் 17 முதல் அமலுக்கு வருகிறது.
- சேலம் மாவட்டம், வாழப்பாடியை அடுத்த புத்திரகவுண்டன்பாளையத்தில் **உலகிலேயே மிக உயரமான முருகன் திருவுருவச்சிலை (146 அடி)** அமைக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.
- **விக்கிரவாண்டி தொகுதி** எம்எல்ஏ **கு.ராதாமணி** காலமானதைத் தொடர்ந்து, அந்த தொகுதி **காலியாக இருப்பதாக** தமிழக சட்டப்பேரவை செயலகம் அறிவிக்கை செய்துள்ளது.
- சிறப்பு நிலை நகராட்சியாக இருந்த **ஆவடியை அவசர சட்டம் மூலம் மாநகராட்சியாக** தமிழக அரசு தரம் உயர்த்தியுள்ளது. இதன்மூலம் தமிழகத்தின் **15-வது மாநகராட்சியாக ஆவடி** உதயமாகி உள்ளது.

- இந்த மாநகராட்சியானது **கோவை மாநகராட்சியின் சட்ட திட்டங்களின்படி** உருவாக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தின் **38 எம்பிக்களும்** மக்களவையில் **தமிழில் பதவிப் பிரமாணம்** செய்து கொண்டனர்.
- இந்திய ரயில்வேயில் முதல்முறையாக **மதுரை ரயில் நிலையத்தில்**, குளிரூட்டப்பட்ட பயணியர் காத்திருப்பு அறை, **5 நட்சத்திர விடுதிகளுக்கு இணையான** பயணியர் தங்கும் அறைகள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.
- உலக அளவிலான **மீன் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது** இடம் வகிப்பதாக தமிழக **ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்** தெரிவித்துள்ளார்.
- நாகை மாவட்டம், **சீர்காழி அருகே நாங்கூரில் அகழ்வாராய்ச்சி** மூலம் கண்டெடுக்கப்பட்ட **தொல்பொருள்கள்** கண்காட்சி நடைபெற்றது.
- தமிழ்நாடு டாக்டர் **ஜெ.ஜெயலலிதா** மீன்வள பல்கலைக்கழகம், **அமெரிக்காவில் உள்ள உலக நீர்வாழ் உயிரின வளர்ப்பு** சங்கத்தின் ஆசிய பசிபிக் தொகுப்புடன் இணைந்து, '**ஆசிய பசிபிக் நீர்வாழ் உயிரின வளர்ப்பு - 2019**' என்ற சர்வதேச கருத்தரங்கை **சென்னை நந்தம்பாக்கத்தில்** உள்ள வர்த்தக மையத்தில் நடத்தியது.
- ஜூன் 1 முதல் 19-ம் தேதி வரையிலான காலத்தில் **தமிழகத்தின் பிலிகுண்டுலுவுக்கு 1.729 டிஎம்சி காவிரி நீர் வந்து சேர்ந்துள்ளதாக** காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுவின் தலைவர் நவீன் குமார் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் 13 மாவட்டங்களில் மாவட்டத்துக்கு ஒன்று வீதம் **13 அரசு மருத்துவக் கல்லூரியை தொடங்குமாறு** தமிழக அரசுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
- அனைத்து பள்ளிகளிலும் **வாரம் ஒருநாள் யோகா பயிற்சி அளிக்கப்பட இருப்பதாக** பள்ளிக்கல்வி அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.
- மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் **திருவள்ளுவர் சிலை திறப்பு** மற்றும் பல்கலைக் கழக முன்னோட்டக் காட்சி அரங்குக்கு குடியரசு முன்னாள் தலைவர் **ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் பெயர் சூட்டுதல்** மற்றும் படத்திறப்பு விழா நடைபெற்றது.
- குடிநீர் திட்டப் பணிகளுக்கு **கூடுதலாக ரூ.200 கோடியை ஒதுக்கீடு செய்து** முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.
- தமிழகத்தில் மிக முக்கிய சாலைகளில் ஒன்றான **ஆற்காடு-விழுப்புரம் நெடுஞ்சாலை ரூ.425 கோடி செலவில்** புதுப்பிக்கப்பட்டுள்ளது. இந்தச் சாலையை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி திறந்து வைத்தார்.
- பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட பெண்கள் **20 வார காலத்துக்குட்பட்ட கருவை கலைக்க** மருத்துவக்குழுவையோ நீதி மன்றத்தையோ **நாட வேண்டிய அவசியமில்லை** என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- நாட்டிலேயே பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக **தமிழகத்தில் இ-அடங்கல் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது**. **ஆந்திரம், பஞ்சாப்** உள்ளிட்ட மாநிலங்களில் இ-அடங்கல் திட்டம் இருந்தாலும் அவற்றை **அதிகாரிகள் மட்டுமே செயல்படுத்த முடியும்.** ஆனால் தமிழகத்தில் தான் விவசாயிகளும் இத்திட்டத்தில் **பதிவு செய்து அரசு வழங்கும் சலுகைகளை பெறும் வகையில்** உருவாக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் முதன்முறையாக சர்வதேச தரத்தில் **ரூ.20 கோடி செலவில் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு தனி விளையாட்டு மைதானம்** அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
- **மதுரை, திருச்சி** ஆகிய இடங்களில் அமைந்துள்ள அரசு தானியங்கி பணிமனைகளில் அரசு ஊர்தி ஓட்டுநர்களுக்கு புத்துணர்வு அளிக்கும் வகையில் **அம்மா ஓட்டுநர் பயிற்சி நிறுவனங்கள்** அமைக்கப்பட்டுள்ளன.

- **திருநெல்வேலி** அரசு பொறியியல் கல்லூரி அருகே இந்திய கடற்படைக்குச் சொந்தமான இடத்தில் **ரூ.14 கோடி மதிப்பில் செயற்கைக் கோள் தகவல் பதிவிறக்கம் நிலையம்** உருவாக்கப்பட்டுள்ளது.
- விண்வெளித் தகவல்களை பதிவிறக்கம் செய்து **கட்டுப்பாட்டு மையங்களுக்கு தெரிவிக்கும் வகையில்** இது உருவாக்கப்பட்டுள்ளது.
- சென்னை பெருநகர காவல்துறையின் சார்பில் **திருட்டு செல்லிடப்பேசிகளை கண்டறியும் வகையில் 'டிஜிகாப் (DIGICOP)'** என்ற பெயரிலான செல்லிடப்பேசி செயலி சேவை 2019 பிப்ரவரி மாதம் 6-ஆம் தேதி தொடங்கி வைக்கப்பட்டது.
- தற்போது இந்த செயலி மேம்படுத்தப்பட்டு, இதில் **சிசிடிஎன்எஸ் சேவை சேர்க்கப்பட்டு "டிஜிகாப் 2.0"** என்ற பெயரில் ஜூன் 15-ஆம் தேதி வெளியிடப்பட்டுள்ளது.
- காவிரியின் குறுக்கே **மேக்கேதாட்டு பகுதியில் புதிய அணை கட்ட கர்நாடகத்துக்கு அனுமதி தரக் கூடாது** என்று பிரதமர் நரேந்திர மோடியை, முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.
- கன்னியாகுமரி மாவட்டம், **தேங்காய்ப்பட்டினத்தில் ரூ.97.40 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகத்தை** தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.
- தமிழகத்தில் **புதிதாக 11 உணவு தானிய சேமிப்புக் கிடங்குகளை** முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி திறந்து வைத்தார்.
- பெண் சிசுக் கொலையை தடுப்பதை மையமாக வைத்து **கடந்த 1992-ம் ஆண்டு சேலத்தில் தொட்டில் குழந்தை திட்டம்** அறிமுகப்படுத்தப்பட்டது.
- **10 மாவட்டங்களில்** தொட்டில் குழந்தைத் திட்டம் தற்போது செயல்பாட்டில் இருந்து வருகிறது. இந்நிலையில், **தமிழகம் முழுவதும் இத்திட்டத்தை விரிவுபடுத்த** சமூகநலத் துறை முடிவு செய்துள்ளது.
- அடுத்த தலைமுறையினருக்கான போக்குவரத்து எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து அமெரிக்காவில் உள்ள **'ஸ்பேஸ் எக்ஸ்'** தனியார் நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் போட்டி நடத்தி வருகிறது. இப்போட்டியில் சென்னை ஐ.ஐ.டியை சேர்ந்த **அவிஷ்கார் ஹைபர்லூப் குழு** பங்கேற்கிறது.
- தமிழகத்தின் **நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், அரியலூர், ராமநாதபுரம், கடலூர்** ஆகிய 6 டெல்டா மாவட்டங்களில் மேலும் **104 ஹைட்ரோ கார்பன் கிணறுகளை** அமைக்க, மத்திய சுற்றுச்சுழல் அமைச்சகத்திட்டம் அனுமதி கோரி, எண்ணெய் இயற்கை எரிவாயு கழகம் **(ஓஎன்ஜிசி)** விண்ணப்பித்துள்ளது.
- தமிழகத்தில் **மாநிலங்களவைத் தேர்தலை நடத்தும் அதிகாரியாக** சட்டப் பேரவைச் செயலாளர் **கி.சீனிவாசனை** நியமித்து தலைமைத் தேர்தல் அதிகாரி **சத்யபிரத சாகு** அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.
- கீழடியில் அகழாய்வுப் பணிகளை **உலகத் தரத்திலான பல்கலைக்கழகத்துடன் இணைந்து மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது** என தமிழ் மொழி மற்றும் கலாசாரத் துறை அமைச்சர் க.பாண்டியராஜன் கூறியுள்ளார்.
- தமிழகத்தில் உள்ள **ஏரி-குளங்களை தனியார் தூர்வார எந்தத் தடையும் இல்லை** என்று முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்துள்ளார்.
- தூத்துகுடி **வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின்** கப்பல் சரக்குதளம் 9-ல், **'எம்.வி. இன்ஸ் கஸ்டமோனு'**என்ற கப்பலில் இருந்து, ஜூன் 24-ம் தேதி **ஒரே நாளில் 27,546 மெட்ரிக் டன் ராக் பாஸ்பேட்டை கையாண்டு** புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது.

- காஞ்சிபுரம் மாவட்டம், **நெம்மேலியில்** ரூ 1,259.38 கோடி மதிப்பீட்டில் **கடல்நீரை குடிநீராக்கும் 2- வது ஆலைக்கு** தமிழக முதல்வர் கே.பழனிசாமி அடிக்கல் நாட்டினார்.
- இதற்கான திட்ட மதிப்பீடான ரூ 1,259 கோடியில், **கே.எஃப். டபிள்யு** என்ற ஜெர்மனி நிதி நிறுவனத்திடமிருந்து **ரூ.700 கோடி கடனுதவியும்,** மீதமுள்ள தொகை மத்திய அரசின் **'அம்ருத்' திட்டதின் கீழ்** மானியமாகவும் பெற்று இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த புதிய நிலையத்தை அமைக்கும் பணி வரும் **2021 - ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள்** முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு வரும்.
- தமிழகத்தில் **பெரம்பலூர், தருமபுரி, விழுப்புரம் உள்ளிட்ட 7 மாவட்டங்களில்** ஆண் குழந்தைகளுக்கு நிகரான **பெண் குழந்தைகள் விகிதம்** சரிந்துள்ளது. அதே நேரம் **கடலூர், திருவள்ளூர், சென்னை** மாவட்டங்களில் பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் அதிகரித்து வருகிறது.
- போக்குவரத்து விதிமீறலில் ஈடுபடுவோரிடம் **மின்னணு பணப் பரிமாற்ற முறையில் அபராதம் வசூலிக்க வகை செய்யும் கையடக்கக் கருவிகளை** முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி வழங்கினார்.
- தமிழகத்தின் புதிய தலைமைச் செயலாளராக **கே.சண்முகம்** நியமிக்கப்பட்டுள்ளார்.
- தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு காவல்துறைத் தலைவராக **(டிஜிபி) ஜே.கே.திரிபாதி** நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். இதற்கான உத்தரவை தமிழக அரசு பிறப்பித்துள்ளது.
- இரண்டு சர்வதேச விருதுகளைப் பெற்ற **முதல் காவல் துறை அதிகாரி** என்ற பெருமை திரிபாதிக்கு உண்டு.
- ஸ்காட்லாந்தைச் சேர்ந்த பொது நிர்வாகம் மற்றும் நிர்வாகத்துக்காக காமன் வெல்த் சங்கம், **'Innovation in governance'** என்ற தலைப்பில் திரிபாதிக்கு **தங்கப்பதக்கம்** வழங்கி கவுரவித்தது.
- வாஷிங்டனைச் சேர்ந்த சர்வதேச காவல்துறைத் தலைவர்கள் சங்கத்தின் **'சமூக காவல் விருதையும்'** பெற்றுள்ளார். **பிரதமர் விருதை வாங்கிய முதல் காவல்துறை அதிகாரியும் இவர்தான்.**
- மாநிலம் முழுவதும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை மேம்படுத்த **அனைத்து மாவட்டங்கிலும் ஒருங்கிணைந்த குழுக்கள் அமைக்கப்படும்** என்று அமைச்சர் எஸ்.பி. வேலுமணி தெரிவித்துள்ளார்.
- அமெரிக்காவின் **சிகாகோ** நகரில் ஜூலை 3 முதல் 7-ம் தேதி வரை **உலக தமிழ் மாநாடு** நடைபெறுகிறது. சர்வதேச **தமிழாய்வு சங்கத்தினர்** இம்மாநாட்டை நடத்துகின்றனர்.
- தமிழ்நாட்டில் முதல் முறையாக **தஞ்சாவூர்** அரசு மருத்துவமனையில், **'சீமாங்க்'** திட்டத்தில் 24 மணி நேரமும் இயங்கும் மகப்பேறு மருத்துவப் பிரிவில் **'எட்டு திருநங்கையர்' பாதுகாவலர்களாக** பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி திருவள்ளூர் மாவட்டம் **ஆவடியில்,** புதிதாக அமைக்கப்பட்டுள்ள, **'பருத்திப்பட்டு ஏரி பசுமை பூங்கா'வை** காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.
- செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் ரூ. 60 கோடி மதிப்பில் 50 ஏக்கர் பரப்பில் **சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ மையம்** விரைவில் அமைக்கப்பட உள்ளது.
- தமிழ்நாட்டில் முதல் முறையாக **காற்றாலைகள் மூலம் ஒரே நாளில்** (ஜூன் 20) **5 ஆயிரத்து 70 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்து** சாதனை படைக்கப்பட்டு உள்ளது.
- தேசிய அளவில் காற்றாலை மின்சார உற்பத்தியில் **தமிழ்நாடு முதல் இடத்தில்** இருந்து வருகிறது.

- சென்னையின் **5-வது நீர்த்தேக்கம்** திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள **கண்ணன் கோட்டை** மற்றும் **தேர்வாய் கண்டிகை** ஆகிய ஏரிகளை இணைத்து கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.
- சென்னை **எம்.ஜி.ஆர். சென்டிரல்** ரெயில் நிலையத்திற்கு வரும் **பழைய குற்றவாளிகளை** கண்காணிப்பு கேமரா மூலம் **அடையாளம் காணும்** அதிநவீன **'எட்ஜ் பாஸ்ட்'** தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- தமிழக அரசு **5 சிறிய உப்பு நீக்க ஆலைகளை** சென்னையில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இந்த ஆலைகள் ஒவ்வொன்றும் **1 மில்லியன் லிட்டர் கொள்ளளவு** கொண்டது.
- தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக **பேராசிரியர் கே.பார்த்தசாரதி**நியமிக்கப்பட்டுள்ளார்.
- திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூரை அடுத்த **எறும்பூர் கிராமத்தில் ராஜ ராஜ சோழன் காலத்து கல்வெட்டு** உள்பட 3 கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- தமிழகம் முழுவதும் அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்களின் வருகையை முறைப்படுத்த **'பயோ மெட்ரிக்' வருகைப்பதிவு** பள்ளி திறக்கும் நாளான ஜீன் 3 முதல் அமல்படுத்தப்படுகிறது.
- **புகையிலைப் பொருட்களால்** ஏற்படும் தீமைகளை விளக்கும் வகையில், **நாட்டிலேயே முதல்முறையாக** கோவை ஸ்ரீராம் கிருஷ்ணா புற்றுநோய் ஆராய்ச்சி மையம் மற்றும் மருத்துவமனை சார்பில் **விழிப்புணர்வு அனிமேஷன் வீடியோ** நேற்று வெளியிடப்பட்டுள்ளது.
- தமிழக அரசால் செயல்படுத்தப்படும் சில திட்டங்களுக்கு விண்ணப்பிப்போரின் ஆண்டு வருமான உச்ச வரம்பு **ரூ.24 ஆயிரத்திலிருந்து ரூ.72 ஆயிரமாக உயர்த்தி** முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.
- 2018- ஆம் ஆண்டு கஜா புயல் தாக்கத்தால் தமிழ்நாட்டில் **புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம்,திண்டுக்கல்** ஆகிய நான்கு மாவட்டங்களில் கடுமையாக பாதிக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களை சீரமைப்பதற்காக **தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி** (NABARD) , தமிழக அரசுக்கு **ரூ.159 கோடி நிதி உதவி** அளிக்க அனுமதி வழங்கி உள்ளது.
- இந்தியாவிலேயே, முதல் முறையாக, அரசு மருத்துவமனையில், துறை ரீதியான, மொபைல் போன் செயலி, **'ஸ்டான் ஆர்தோ'** சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- தேனியைச் சேர்ந்த மாணவி **உதயகீர்த்திகா ஜெர்மனி, போலாந்து, நெதர்லாந்து** ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ள **விண்வெளி ஆய்வு பயிற்சிக்குத் தேர்வாகி** உள்ளார். சர்வதேச அளவில் **இந்தியாவில் இருந்து இவர் ஒருவர் மட்டுமே** இந்தப் பயிற்சிக்கு தேர்வாகி உள்ளார்.
- உச்சநீதிமன்ற உத்தரவின்படி **ஜூன், ஜூலை ஆகிய இரண்டு மாதங்களுக்கான 40.24 டிஎம்சி நீரை காவிரியில் கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும்** என்று காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.
- முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக விசாரிக்கும் **நீதிபதி ஆறுமுகசாமி ஆணையத்தின் விசாரணை காலத்தை 5-ஆவது முறையாக மேலும் 4 மாதங்களுக்கு நீட்டித்து** தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.
- சிவகங்கை மாவட்டம் **கீழடியில்** நடைபெற்ற **5ஆம் கட்ட** அகழாய்வின் போது, **செங்கல் கட்டடம்** கண்டறியப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் காலியாகும் **6 மாநிலங்களவை இடங்களுக்கு ஜூலை 18ம் தேதி** தேர்தல் நடைபெறும். இதற்கான வேட்பு மனுதாக்கல் **ஜூலை 1-ல் தொடங்கும்** என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
- தமிழகத்தில் கடந்த 2007ம் ஆண்டுக்கு முன் கட்டப்பட்ட **விதிமீறல் கட்டிடங்களை அபராதம் செலுத்தி வரன்முறைப்படுத்துவதற்கான காலக்கெடு** வரும் டிசம்பர் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

# இந்தியா

- **வங்கி நடவடிக்கைகள்** மற்றும் **வரிகள் தொடர்பான விவரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான** ஒப்பந்தத்தை மார்ஷல் தீவுகளுடன் இந்திய அரசு மேற்கொண்டுள்ளது.
- பி.எஸ். 6 வாகன விதிகள் **அடுத்த ஆண்டு முதல் அமல்படுத்தப்படும்** என்று மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் தெரிவித்துள்ளார்.
- சுற்றுச்சூழல் அனுமதி பெறாத காரணத்தால் **கோதாவரி-பெண்ணாறு நதிகளை இணைக்கும்** ஆந்திர அரசின் திட்டத்துக்கு தேசிய பசுமை தீர்ப்பாயம் (என்ஜிடி) தடை விதித்துள்ளது.
- மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகத்தின் சார்பில் **"பள்ளிகளில் பண்ணை"** என்ற புதிய திட்டம் தொடங்கப்படவுள்ளது. அந்தத் திட்டத்தின் கீழ், வனத்துறையின் உதவியுடன் **விதைகளை எவ்வாறு விதைப்பது, மரக்கன்றுகளை எவ்வாறு வளர்ப்பது** போன்ற பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்படும்.
- ஆந்திராவின் துணை முதல்வர்களாக 5 பேர் அறிவிக்கப்பட்டுள்ளனர். ஒரு மாநிலத்தில் **துணை முதல்வர் பதவி 5 பேருக்கு** வழங்கப்படுவது இந்தியாவிலேயே இது முதன்முறையாகும்.
- யோகா மூலம் ஆரோக்கியமான வாழ்வுக்கு சிறந்த பங்காற்றும் **ஊடகங்களுக்கு இந்த ஆண்டு முதல் விருதுகள் வழங்க** மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- இந்தியாவின் **முதல் டைனோசர் அருங்காட்சியகம்** குஜராத்தின் மஹிசாகர் மாவட்டம், **ராலி நகரில்** அமைக்கப்பட்டுள்ளது. இது **உலகின் 3-வது டைனோசர்** அருங்காட்சியகமாகும்.
- அரசு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் **இளநிலை படிப்பில் சேர தேசிய நுழைவுத் தேர்வு நடத்த வேண்டும்** என வரைவு தேசிய கல்விக் கொள்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.
- பிரதமர் விவசாயிகள் நிதியுதவி திட்டத்தை **(பிஎம்-கிசான்) விரிவுபடுத்தி அனைத்து விவசாயிகளுக்கும் நிதியுதவி வழங்குவதற்கான** அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
- இந்தியா-மாலத்தீவுகள் இடையே **பாதுகாப்பு, சுகாதாரம் உள்பட 6 துறைகளில்** புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. பிரதமராக 2-ஆவது முறை பதவியேற்ற நரேந்திர மோடி, **முதல் வெளிநாட்டுப் பயணமாக** மாலத்தீவுகளுக்கு சென்ற நிலையில், அங்கு இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.
- மாலத்தீவுகள் அதிபர் முகமது சோலிக்கு, இந்திய கிரிக்கெட் அணியின் **வீரர்கள் கையொப்பமிட்ட கிரிக்கெட் பேட்** ஒன்றை பிரதமர் மோடி பரிசாக வழங்கினார்.
- இந்தியாவுக்கு **ஆளில்லா போர் விமானங்களை விற்பனை செய்வதற்கு அமெரிக்கா ஒப்புதல்** அளித்துள்ளது. மேலும், பாதுகாப்பு தளவாடங்கள் தொடர்பான **அதிநவீன தொழில் நுட்பங்களையும்** இந்தியாவுக்கு வழங்க அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.
- அடுத்த ஆண்டு முதல் நாடு முழுவதும் **அரசு பள்ளிகளில் படிக்கும் 9 மற்றும் 10-ம் வகுப்பு மாணவர்களுக்கும் மதிய உணவு** திட்டத்தை விரிவுபடுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- வடகிழக்கு மாநிலங்களில் முதல்முறையாக **என்பிபி (தேசிய மக்கள் கட்சி) கட்சிக்கு தேசிய கட்சி அந்தஸ்து** கிடைத்துள்ளது.
- 129 நாடுகள் பங்கேற்ற **உலகளாவிய பாலினச் சமத்துவத்துக்கான** பட்டியலில் **இந்தியா 95-வது இடத்தைப்** பிடித்திருக்கிறது.

TENKASI AKASH FRIENDS IAS ACADEMY

- நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான (SDG) பாலினப் பட்டியலை பிரிட்டனைச் சேர்ந்த **ஈகுவல் மெஷர்ஸ் 2030,** என்ற அமைப்பு உருவாக்கியிருக்கிறது. இந்தப் பட்டியல் முதல் மூன்று இடங்களை **டென்மார்க், பின்லாந்து, ஸ்வீடன்** ஆகிய நாடுகள் பிடித்திருக்கின்றன.
- பள்ளி, கல்லூரி பாடத் திட்டத்தில் **யோகா பயிற்சியை சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக** மத்திய 'ஆயுஷ்' துறை அமைச்சர் ஸ்ரீபாத் நாயக் தெரிவித்துள்ளார்.
- ஜம்மு-காஷ்மீர் **சட்டப்பேரவை தொகுதிகளை மறுவரையறை செய்ய** மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- அரபிக்கடலில் உருவாகிய **'வாயு' புயல்** குஜராத்தில் இன்று (13.06.19) அன்று கரையைக் கடந்தது. இந்தப் புயலுக்கு வாயு என பெயர் வைத்த நாடு **இந்தியா** ஆகும்.
- பாஜக மக்களவைக் குழுத் தலைவராக பிரதமர் **நரேந்திர மோடியும்**, துணைத் தலைவராக **ராஜ்நாத்சிங்கும்** தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மாநிலங்களவை குழு தலைவராக அமைச்சர் **தாவர்சந்த் கெலாட்,** துணைத் தலைவராக அமைச்சர் **பியூஷ் கோயல்** ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- ஜம்மு-காஷ்மீரில் குடியரசுத்தலைவர் ஆட்சியை **மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்க** மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- ஷாங்காய் **ஒத்துழைப்பு அமைப்பு** (எஸ்சிஓ) மாநாட்டில் பங்கேற்பதற்காக, கிர்கிஸ்தான் தலைநகர் **பிஷ்கெக் நகருக்கு** வருகை தந்த பிரதமர் **நரேந்திர மோடியும்,** சீன அதிபர் **ஷி ஜின்பிங்கும்** மாநாட்டின் இடையே சந்தித்துப் பேசினர்.
- ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்க வருகை தந்த **ரஷிய அதிபர் விளாதிமீர் புதினை** சந்தித்து **பிரதமர் மோடி** பேச்சுவார்த்தை நடத்தினார். இருநாட்டு **உயரதிகாரிகள் குழுவினர்** அப்போது உடனிருந்தனர்.
- சீன எல்லை அருகே அருணாசலப் பிரதேசத்தில் விபத்தில் சிக்கிய **விமானத்தில் பயணித்த 13 பேரும் உயிரிழந்து விட்டதாக** இந்திய விமானப்படை அறிவித்துள்ளது.
- **2024 ஆம் ஆண்டில் அனைவருக்கும் தூய்மையான குடிநீர் வழங்க** இந்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாக ஜல் சக்தித்துறை அமைச்சர் **கஜேந்திர சிங் ஷெகாவத்** அறிவித்துள்ளார்.
- மெக்சிகோவில் நடைபெற்ற **33வது கௌதலஜாரா சர்வதேச புத்தகக் கண்காட்சியில் "சிறப்பு விருந்தினர் நாடாக" இந்தியா** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தன்று (ஜூன் 05), மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேகர் **"மரக்கன்று நடுதலுடன் ஒரு சுய புகைப்படம்"** என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கினார். இவர் **மரக்கன்று நட்டு அதை சுயபடம் எடுத்துப் பதிவிட வேண்டும்** என்று மக்களைக் கேட்டுக் கொண்டார்.
- பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் புகையிலைப் பொருட்களின் விற்பனையைத் தடுப்பதற்காக **"மஞ்சள் கோடு பிரச்சாரம்"** என்ற ஒரு பிரச்சாரத்தை **மணிப்பூர்** அரசு தொடங்கியுள்ளது.
- உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மாநிலத்தில் அதிக மரங்களை வளர்க்கும் நோக்கத்துடன் **மேகாலயா** மாநில அரசானது **"ஒரு குடிமகனுக்கு ஒரு மரம்"** எனும் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- பயங்கரவாதத்துக்கு ஆதரவளித்து, நிதியுதவி செய்து வரும் **நாடுகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்** என ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்சிஓ), உச்சி மாநாட்டில் பிரதமர் **நரேந்திர மோடி** வலியுறுத்தியுள்ளார்.
- நுண்துகள் காற்று மாசுபாட்டை குறைக்க **இந்தியாவின் முதல் உமிழ்வு வர்த்தகத் திட்டத்தினை** குஜராத்தின் முதல்வர் விஜய் ரூபானி 2019 ஆம் ஆண்டின் உலக சுற்றுச்சூழல் தினத்தன்றுத் தொடங்கி வைத்தார்.

- 2018 ஆம் ஆண்டின் **போக்குவரத்து நெரிசல் குறியீடானது** ஆம்ஸ்டர்டேமைச் சேர்ந்த **டோம்டோம்** என்ற நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது. இது தொடர்ந்து இரண்டாவது முறையாக **உலகின் மிகவும் போக்குவரத்து நெரிசல் மிக்க நகரமாக** மும்பையைத் தரவரிசைப் படுத்தியுள்ளது. இந்தப் பட்டியலில் **தில்லி நகரம் நான்காவது இடத்தில்** உள்ளது.
- இந்திய உணவுப் பொருள் பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையமானது (Food Safety and Standards Auhority of India FSSAI) **முதலாவது மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீட்டை** உருவாக்கியுள்ளது.
- இந்தக் குறியீட்டில் **சண்டிகர் முதலிடத்தில்** உள்ளது.
- நிதி ஆயோக் அமைப்பின் **5-வது ஆட்சி மன்றக் குழு கூட்டம்,** டெல்லியில் குடியரசுத்தலைவர் மாளிகை வளாகத்தில் உள்ள கலாச்சார மையத்தில் நடைபெற்றது.
- மோசடி ஆராய்ச்சிக் கட்டுரை வெளியீடு இந்தியாவில் அதிகரித்திருப்பதால், **பட்டியலிட்டுள்ள கட்டுரை வெளியீடு தளங்களில் (ஜார்னல்) மட்டுமே ஆராய்ச்சிக் கட்டுரைகளை பிஎச்.டி. மாணவர்கள் வெளியிட வேண்டும்** என பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) எச்சரிக்கை விடுத்துள்ளது.
- பொருளாதாரத்தில் நலிந்த பொதுப்பிரிவினருக்கான இடஒதுக்கீட்டை அமல்படுத்துவதற்காக **30 மத்திய பல்கலைக்கழகங்களுக்கு ரூ.1,496 கோடியை வழங்க** மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- எம்பிபிஎஸ் முடித்தவர்களுக்கு **புதிய தகுதித் தேர்வை அடுத்த ஆண்டு முதல்** மத்திய அரசு அமல்படுத்த உள்ளது.
- மத்திய கலாச்சார அமைச்சகத்தின் கீழுள்ள இந்தியத் தொல்லியல் துறை ஆய்வகம் **சவுக்கண்டி ஸ்தூபியைத்** "தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாக்கப்பட்ட ஒரு பகுதியாக" அறிவித்துள்ளது.
- இது உத்தரப்பிரதேசத்தின் **சாரநாத்தில்** அமைந்துள்ளது.
- மத்தியப்பிரதேச அரசு இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை **14 சதவீதத்திலிருந்து 27 சதவீதமாக** உயர்த்தியுள்ளது.
- இந்தியாவில் முதல் முறையாக **டெல்லி மெட்ரோ இரயிலில் கழிவுப் பொருட்களில் இருந்து மின்சாரம் தயாரிக்கும்** திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர்.
- இந்திய விமானப்படைக்கு சொந்தமான **AN-32 ரக விமானம்** ஜுன் 3-ந் தேதி மாலை அசாம் மாநிலம், **ஜோர்கட் விமானப்படை நிலையத்தில்** இருந்து அருணாசல பிரதேச மாநிலத்தில் உள்ள **மென்சுகா விமானப்படை தளம்** நோக்கி புறப்பட்ட விமானம் மாயமானது.
- 8 நாட்கள் தேடல் பணிக்கு பின், மாயமான விமானத்தின் பாகங்கள் அருணாசல பிரதேச மாநிலம், சியாங் மாவட்டத்தின் **லிபோ கிராமத்தில் இருந்து 16 கி.மீ வடக்கே** கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.
- மக்களவையில் **காங்கிரஸ் கட்சித் தலைவராக** அக்கட்சியின் மூத்த தலைவரும், மேற்கு வங்க எம்.பி.யு.மான **அதீர் ரஞ்சன் சௌத்ரி** நியமிக்கப்பட்டுள்ளார்.
- வாகன ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான **குறைந்தபட்ச கல்வித் தகுதியை நீக்குவதற்கு** மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை முடிவு செய்துள்ளது.
- ஆந்திரப் பிரதேச மாநிலத்துக்கு **'சிறப்பு அந்தஸ்து' அளிக்க மத்திய அரசை வலியுறுத்தி,** மாநில சட்டப்பேரவையில் **தீர்மானம்** நிறைவேற்றப்பட்டுள்ளது.
- இந்தியாவில் உள்ள **அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த கட்டடக் கலைகள்** குறித்த தகவல்களுடன், **ஹிந்தி மொழியையும் சர்வதேச அளவில் பயிற்றுவிக்கும் திட்டத்துக்கு** அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனம் **(நாசா)** நிதியுதவி அளித்துள்ளது.

- குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மக்களவை மூத்த உறுப்பினர் **வீரேந்திர குமார் மக்களவை இடைக்கால தலைவராக** பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு குடியரசுத் தலைவர் **ராம்நாத் கோவிந்த்** பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- பள்ளிகளில் **ஜூன் 21-ம் தேதி யோகா தினம் கொண்டாட** மத்திய மனித வள அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.
- உலகின் மக்கள்தொகை **தற்போது 770 கோடியாக** உள்ளது. இந்த எண்ணிக்கை வரும் **2050 ஆம் ஆண்டில் 970 கோடியாக** அதிகரிக்கும். 30 ஆண்டுகளில் **200 கோடி மக்கள் தொகை** அதிகரித்துவிடும். **இந்த நூற்றாண்டின் இறுதியில்** (2100-ம் ஆண்டில்) உலக மக்கள் தொகை எண்ணிக்கை **1,100 கோடியை தாண்டிவிடும்.** மேலும், இன்னும் 8 ஆண்டுகளில் அதாவது **2027-ம் ஆண்டில் மக்கள்தொகையில் சீனாவை இந்தியா முந்திவிடும்.** இதன்மூலம் **உலகிலேயே அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக** இந்தியா விளங்கும்.
- **'ஒரே தேசம் ஒரே தேர்தல்'** திட்டம் குறித்து ஆலோசனைகளை அளிப்பதற்கு குழு அமைக்க பிரதமர் நரேந்திர மோடி முடிவு செய்துள்ளார்.
- தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்த **ஓம் பிர்லா எம்.பி.மக்களவையின் புதிய தலைவராக** ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- பிரபல **கியூ.எஸ். உலக பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில்** 22 இந்திய கல்வி நிறுவனங்கள் இடம் பிடித்துள்ளன. கடந்த ஆண்டைப் போல **முதல் 200 இடங்களில் மூன்று இந்திய கல்வி நிறுவனங்கள்** இடம் பிடித்து அசத்தியுள்ளன.
- இதில் கடந்த ஆண்டு **162-ஆம்** இடத்தில் இருந்த **மும்பை ஐஐடி**, இம்முறை 10 இடங்கள் முன்னேறி **152-ஆவது** இடத்தைப் பிடித்துள்ளது.
- **தில்லி ஐஐடி182-ஆவது** ரேங்குடன் இந்திய கல்வி நிறுவனங்களில் **இரண்டாம் இடம்** பிடித்துள்ளது.
- **பெங்களூரு இந்திய அறிவியல் கழகம் (ஐஐஎஸ்சி),** இந்த முறை **184-ஆவது** ரேங்குடன் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது.
- சத்தீஸ்கரில் **பழங்குடியினருக்கு இலவச சத்துணவு** மற்றும் **மருத்துவ வசதிகள்** வழங்கும் திட்டத்தை மாநில முதல்வர் **பூபேஷ் பகேல்** அறிவித்துள்ளார்.
- பயணிகள் ரயில்களை இயக்குவதற்கு **தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்க** மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- விவசாயிகளின் **வருமானத்தை இரு மடங்காக்க இஸ்ரேலுடன் கூட்டு சேர்ந்து மத்திய அரசு முயற்சி** மேற்கொண்டுள்ளது என இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் ரோன் மல்கா தெரிவித்துள்ளார்.
- மத்திய சுற்றுலா அமைச்சகத்தின் சார்பில், நாட்டிலுள்ள பல்வேறு சுற்றுலாத் தளங்களில் **ஜூன் 15-ஆம் தேதி முதல் 21 ம் தேதி வரை** ஒருவார காலம் **யோகாவின் சிறப்புகளை வெளிப்படுத்தும்** வகையிலும், சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் அதன் அவசியத்தை அறிந்து கொள்ளும் **வகையிலும்** பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.
- குஜராத் மாநிலத்தில் உள்ள **'லோத்தல்'** என்ற (Lothal) பண்டைய இந்திய அகழ்வகத்தில் **'தேசிய கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகம்'** (National Maritime Heritage Museum) அமைக்கும் முயற்சியில் **இந்தியா, போர்ச்சுக்கல்** நாட்டுடன் இணைந்து செயல்படவுள்ளது.
- **'இந்தியாவின் முதல் சூரிய சமையலறைக் கிராமம்'** (First Solar Kitchen only village in India) என்ற சிறப்பை விளங்கும் மத்தியப் பிரதேச மாநிலத்தின் **'பெடுல்'** (Betul) மாவட்டத்தில் உள்ள **'பன்சா'** (Bancha) என்ற கிராமம் பெற்றுள்ளது.

TENKASI AKASH FRIENDS IAS ACADEMY

- லஞ்சம், ஊழல் புகார் எதிரொலியின் காரணமாக கலால், சுங்கத் துறையில் **15 அதிகாரிகளுக்கு கட்டாய ஓய்வு அளித்து** மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- பெண்கள் பாதுகாப்புக்காக **'பிங்க் சாரதி'** (Pink Sarathi) வாகனங்களை **கர்நாடக மாநில அரசாங்கம்** துவக்கியுள்ளது.
- ஜி 20 நாடுகளின் வருடாந்திர உச்சி மாநாடு, **ஒசாகா நகரில்** வரும் 27 முதல் 29-ம் தேதி வரை நடைபெறுகிறது. இதில் **பிரதமர் மோடி** பங்கேற்கிறார். இந்த மாநாட்டில் இந்தியாவின் தனிப்பட்ட பிரதிநிதியாக **(ஷெர்பா)** முன்னாள் மத்திய அமைச்சர் **சுரேஷ் பிரபு** பங்கேற்கிறார். ஜி 20 உச்சி மாநாட்டில் **பிரதமர் மோடி பங்கேற்பது இது 6-வது** முறையாகும்.
- ரூ.3 கோடி செலவில் அமைக்கப்பட்ட **80 கிலோவாட் சூரிய சக்தி படகு** விரைவில் கேரள மாநிலம் **ஆலப்புழாவில்** பயன்பாட்டுக்கு வரவுள்ளது.
- அரசுத் துறைகள், வங்கிகளில் **ஊழலை ஒழிக்கவும் திறமையின்மையைக் களையவும்** ஊழியர்களின் பணித்திறன், **பணியாளர் பணி பதிவேட்டை ஆய்வு செய்ய** மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
- மத்தியில் இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, **முத்தலாக் தடை மசோதாவை மக்களவையில் மீண்டும்** அறிமுகப்படுத்தி உள்ளது.
- புதுவையில் **ஆகஸ்ட் 1-ஆம் தேதி முதல் நெகிழிக்கு (பிளாஸ்டிக்) தடை விதிக்கப்படும்** என மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மு.கந்தசாமி தெரிவித்துள்ளார்.
- ஜார்க்கண்ட் மாநிலம், **ராஞ்சி நகரில்** பிரபத்தாரா மைதானத்தில் **5 ஆவது சர்வதேச யோகா தினத்தையொட்டி** (ஜுன் 21) **40,000** யோகா ஆர்வலர்களுடன் இணைந்து பல்வேறு ஆசனப் பயிற்சிகளை **மோடி** செய்தார்.
- நாடாளுமன்றத்தில் **மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா** தலைமையில் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது.
- கோதாவரி நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள **காளேஸ்வரம் நீர்ப்பாசனத் திட்டத்தை** தெலங்கானா மாநில முதல்வரும், தெலங்கானா **ராஷ்டிர சமிதி** தலைவருமான **கே.சந்திர சேகர் ராவ்** தொடங்கி வைத்தார்.
- இந்த திட்டத்தின் வழியாக கிடைக்கும் நீர் மூலம், தெலங்கானா மக்களுக்கு **'பாகிரதா' திட்டத்தின் கீழ் சுத்தமான குடிநீர்** வழங்கப்படும்.
- அது மட்டுமன்றி தெலங்கானாவின் **70 சதவீத குடிநீர் தேவை** பூர்த்தி செய்யப்படும்.
- சுமார் **1,832 கி.மீ தூரம்** அமைக்கப்பட்டுள்ள இந்த திட்டத்தில், **1,500 கி.மீ தூரம்** கால்வாய் வழியாகவும், **203 கி.மீ தூரம்** சுரங்கப் பாதை வழியாகவும் நீர் கொண்டு வரப்படுகிறது. இதில் **19 இடங்களில் நீரேற்று நிலையங்கள்** மற்றும் **நீர்த்தேக்கங்கள்** அமைக்கப்பட்டுள்ளன. இந்த வகையில், **உலகிலேயே மிகப்பெரிய நீர்ப்பாசனத்திட்டமான காளேஸ்வரம் திட்டம்** 3 ஆண்டுகளில் முடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.
- குஜராத்தில் சிங்கங்கள் வாழும் **கிர்வனப்பகுதி** வழியாகச் செல்லும் **ரயில் தண்ட வாளங்களை அகற்ற வேண்டும்** என்றும், அப்பகுதியில் உள்ள **கல் குவாரிகளை மூட வேண்டும்** என்றும் அந்த மாநில உயர்நீதி மன்றத்தில் ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
- வங்கிக் கணக்கு தொடங்கவும், செல்லிடப்பேசி சிம் கார்டு இணைப்பு வாங்கவும் **விருப்பத்தின் அடிப்படையில் ஆதாரை அடையாள ஆவணமாக பயன்படுத்த வகை செய்யும் மசோதா,** மக்களவையில் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
- கார்கில் போர் நடந்து **20 ஆண்டுகள்** நிறைவடைவதைக் குறிக்கும் வகையில் மத்தியப் பிரதேசத்திலுள்ள **குவாலியர் விமானப்படை தளமானது, அருங்காட்சியகம்** போல் மாற்றப்பட்டுள்ளது.

- சுற்றுச்சூழல் மாசடைவதைத் தடுப்பதற்காக, **வரும் ஆகஸ்ட் மாதத்தில் இருந்து பிளாஸ்டிக் கழிவுகளை இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்க** மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- இந்த ஆண்டில் **ஜூலை 25 முதல் 27 வரை கார்கில் வெற்றி தினம்** நாடு முழுவதும் கொண்டாடப்படவுள்ளது.
- பாகிஸ்தானுக்கு எதிரான இந்தியாவின் உறுதியான வெற்றியை நினைவுகூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் **ஜூலை 26 அன்று கார்கில் போர் வெற்றி தினம்** (Kargil Vijay Diwas) கொண்டாடப்படுகிறது.
- இந்த 2019-ஆம் ஆண்டு, கார்கில் போர் **வெற்றியின் 20வது ஆண்டுவிழா** ஆகும். இந்த கார்கில் போர் வெற்றி தினம் **'நினைவில் கொள்ளவும், மகிழ்ச்சி கொள்ளவும், புதுப்பிக்கவும்'** (Remember, Rejoice and Renew) என்ற மையக்கருத்துடன் கொண்டாடப்படுகிறது.
- **ஆந்திர மாநிலத்தில்,** முதலமைச்சர் **ஜெகன் மோகன் ரெட்டி** தலைமையிலான புதிய அரசால் **போலீசாருக்கு வார விடுமுறை** வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- கேரளத்தில் **'நிபா'வைரஸ் பாதிப்பு** உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, மாநிலத்தில் நிலவும் சூழலை ஆய்வு செய்ய **6 பேர் கொண்ட குழுவை** மத்திய அரசு அனுப்பி வைத்துள்ளது.
- நாட்டின் **பாதுகாப்பு, முதலீடு** மற்றும் **பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு** ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதமாக, **அதிக அதிகாரங்கள் கொண்ட அமைச்சர்கள் குழுக்களை** பிரதமர் நரேந்திர மோடி அமைத்துள்ளார்.
- அதன்படி, பாதுகாப்புக்கான குழுவில் **5 அமைச்சர்களும்,** முதலீடு மற்றும் **பொருளாதார வளர்ச்சிக்கான குழுவில் 5 அமைச்சர்களும்,** வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு குழுவில் **10 அமைச்சர்களும்** இடம்பெற்றுள்ளனர். இந்தக் குழுக்கள் அனைத்துக்கும் **பிரதமர் நரேந்திர மோடி** தலைமை வகிப்பார்.
- மாணவர்களின் **மன அழுத்தப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக ஆலோசனை மையங்களை** அமைக்க அனைத்து மருத்துவக் கல்லூரிகளும் இந்திய மருத்துவக் கழகம் (ஐஎம்ஏ) அறிவுறுத்தியுள்ளது.
- இந்தியாவில் காற்று மாசுபாட்டால் **ஆண்டுதோறும் 5 வயதுக்குட்பட்ட ஒரு லட்சம் குழந்தைகள் இறப்பதாக** தில்லியைச் சேர்ந்த அறிவியல்-சுற்றுச்சூழல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- எம்பிபிஎஸ் படிப்பில் நேரடியாக 2-ம் ஆண்டில் சேர **நர்ஸ்கள், பல் மருத்துவர்களுக்கு அனுமதி தர வேண்டும்** என்று தேசிய கல்வி கொள்கை வரைவு அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.
- ஜப்பானில் நடக்க இருக்கும் இந்த ஆண்டுக்கான **ஜி-20 உச்சி மாநாட்டின் நிதியமைச்சர்கள் சந்திப்பில்** மத்திய நிதியமைச்சர் **நிர்மலா சீதாராமன்** பங்கேற்க இருக்கிறார்.
- கடற்படையை நவீனப்படுத்துவதற்காக, **ரூ.17,500 கோடி மதிப்பில் 24 அதிநவீன ஹெலிகாப்டர்களை வாங்க** அமெரிக்காவுடன் ஒப்பந்தம் மேற்கொள்ள மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- இந்தியாவின் முதல் **'பிளாக்செயின் மாவட்டம்'** (Block chain District), தெலுங்கானா மாநிலத் தலைநகர் **'ஐதராபாத்'** நகரில் அமைக்க தெலுங்கானா அரசு முடிவு செய்துள்ளது. பிளாக்செயின் தொழில்நுட்பம் **ஒரு குறியாக்க தொழில்நுட்பம்** (Cryptogrphy) ஆகும்.
- பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம், அண்மையில் அரியானா மாநிலத்தில் உள்ள **மனிதர்களைப் போன்ற சட்டப்பூர்வ உரிமைகள், அனைத்து விலங்குகளுக்கும் இருப்பதாக** தீர்ப்பு அளித்துள்ளது.

- சுகாதாரத் தரமின்றி ஆன்லைன் உணவு விநியோகத்தை தடுக்க **பஞ்சாப் மாநில அரசு** முடிவு செய்துள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையில் **193 நாடுகள் உறுப்பினர்களாக** இடம்பெற்றுள்ளன. இந்த சபையின் முக்கிய அங்கமான **பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்கா, ரஷியா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ் ஆகிய 5 நாடுகள் நிரந்தர** உறுப்பினர்களாக உள்ளன.
- **தற்காலிக உறுப்பினர்களாக 10** நாடுகள் உள்ளன. இந்த கவுன்சிலுக்கு **2 ஆண்டுகள் பதவிக்காலம்** என்ற அடிப்படையில், ஆண்டுதோறும் **5 தற்காலிக உறுப்பினர்களை** ஐ.நா. சபை தேர்வு செய்து அனுப்பி வருகிறது.
- 2021-22 ஆண்டுகளுக்கான உறுப்பினர் தேர்தல் **அடுத்த ஆண்டு ஜுன் மாதத்தில்** நடைபெறவுள்ளது. அந்த தேர்தலில், **இந்தியா வேட்பாளராக** போட்டியிடவுள்ளது.
- இந்நிலையில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் **இந்தியா உறுப்பினராவதற்கு ஆசிய-பசிபிக் குழுமத்தைச் சேர்ந்த 55 நாடுகள் ஆதரவு** தெரிவித்துள்ளன.
- இதற்கு முன்பு 1950- 51, 1967-68, 1972-73, 1977- 78, 1984-85, 1991-92, 2011-12 ஆகிய ஆண்டுகளில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் **இந்தியா உறுப்பினராக இடம்** பெற்றிருந்தது.
- அஸ்ஸாமில் **தேசிய குடிமக்கள் பதிவேட்டில்** (என்ஆர்சி) இருந்து இந்தியர்கள் தான் என்பதற்கான உரிய ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் **மேலும் 1.02 லட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.**
- அரசு முறைப் பயணமாக இந்தியா வந்துள்ள அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் **மைக் பாம்பேயோ,** தில்லியில் பிரதமர் **நரேந்திர மோடி,** வெளியுறவுத் துறை அமைச்சர் **ஜெய்சங்கர்** ஆகியோரை சந்தித்துப் பேசினார்.
- இந்தச் சந்திப்புகளின்போது, பயங்கரவாதத்தை ஒடுக்குவதில் ஒத்துழைப்பு, **ரஷியாவிடம் இருந்து எஸ்- 400 ரக ஏவுகணைகளைக் கொள்முதல் செய்வது, ஈரானிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வது** உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.
- குடிநீர் பஞ்சத்தால் மிகவும் **பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களைக் கண்காணிக்க** கூடுதல் மற்றும் இணைச் செயலர்கள் உள்பட **255 உயரதிகாரிகளை** மத்திய அரசு நியமித்துள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தில் நடைபெற்று வரும் **போலாவரம் அணை கட்டுமானப் பணிகளுக்கான அனுமதியை 2 ஆண்டுகளுக்கு** மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் நீட்டித்துள்ளது.
- உத்தரகண்டில் **இரண்டு குழந்தைகளுக்கு மேல் உள்ளவர்கள் பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிடுவதைத்தடை செய்யும் மசோதா** மாநில சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.
- ஆந்திர மாநிலத்தில் விவாசயத்துக்கு ஜுன் 27 முதல் **பகலில் 9 மணி நேரம் இலவச மின்சாரம்** வழங்க முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி உத்தரவிட்டுள்ளார்.
- **ஜி20 மாநாட்டில்** பங்கேற்பதற்காக ஜப்பான் சென்றுள்ள பிரதமர் **நரேந்திர மோடி,** அந்நாட்டு பிரதமர் **ஷின்ஸோ அபேவை ஒசாகா நகரில்** சந்தித்துப் பேசினார். அப்போது, சர்வதேச பொருளாதார சூழல், இந்தியாவில் **ஜப்பான் உதவியுடன் மேற்கொள்ளப்படும் உள்கட்டமைப்புப் பணிகள்,** தலைமறைவு நிதி மோசடியாளர்கள் விவகாரம், நிலநடுக்கம் உள்ளிட்ட **பேரிடர் சூழல்களை கையாளுவது** உள்பட பல்வேறு விஷயங்கள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர்.
- பசுப் பாதுகாப்பு பெயரில் **வன்முறையில் ஈடுபடுவோருக்கு 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்க** வகை செய்யும் திட்டத்துக்கு **மத்தியப் பிரதேச அரசு** தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- குருநானக்கின் **550- ஆவது பிறந்த தினத்தையொட்டி, அவரது நினைவாக நாணயம்** தில்லியில் வெளியிடப்பட்டுள்ளது.

- புதிய இடஒதுக்கீட்டின் அடிப்படையில் **உயர் கல்வி நிறுவனங்களில் நேரடியாக 7,000 ஆசிரியர்களை நியமிக்க வகை செய்யும்** மத்திய கல்வி மசோதா மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது
- **புதிய தலைமைச் செயலகம் அமைப்பதற்காக** தெலங்கானா முதல்வர் கே.சந்திரசேகர் ராவ் அடிக்கல் நாட்டினார். ஹைதராபாதில் **ஹூசைன்சாகர் ஏரி அருகே** புதிய கட்டடம் அமைப்பதற்காக அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.
- சரக்கு ரயில்களின் பெட்டிகளில் **விளம்பரங்கள் செய்யும் நடைமுறையை தென்கிழக்கு ரயில்வே** அறிமுகப்படுத்தியுள்ளது.
- மத்திய அமைச்சரும், லோக் ஜனசக்தி கட்சித் தலைவருமான **ராம் விலாஸ் பாஸ்வான், பிகாரிலிருந்து மாநிலங்களவை உறுப்பினராக** போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ஆந்திராவில் தினமும் மக்களை நேரில் சந்தித்து அவர்களிடம் மனுக்களை பெறும் **'மக்கள் தர்பார்' திட்டம்** (ஜூலை 1) முதல் அமலுக்கு வரும் என அம்மாநில முதல்வர் **ஜெகன்மோகன் ரெட்டி** அறிவித்துள்ளார்.
- பேரிடரை எதிர்கொள்வதற்காக **உலக நாடுகள் இணைந்து செயல்பட வேண்டியது அவசியம்** என பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.
- உத்தர பிரதேசம், **வாரணாசியில் கங்கை நதியில் மிதக்கும் பயோ கழிவறை வசதி** விரைவில் தொடங்கப்பட உள்ளது.
- நாட்டில் உள்ள ஏழை மக்களின் நலனுக்காக **'ஒரே நாடு; ஒரே ரேஷன் அட்டை'திட்டம் விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக** மத்திய உணவுத் துறை அமைச்சர் **ராம்விலாஸ் பாஸ்வான்** தெரிவித்துள்ளார்.
- இத்திட்டத்தின்படி, ஏழை மக்கள், அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் ரேஷன் அட்டையை கொண்டு, **நாட்டில் எங்கு வேண்டுமானாலும் உணவுப் பொருட்களை** பெற்றுக் கொள்ள முடியும்.
- **'ஒரே நாடு ஒரே ரேஷன் அட்டை'** திட்டத்தை **செயல்படுத்த** மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் மத்திய அரசு **ஓராண்டு கெடு** விதித்துள்ளது.
- காஷ்மீரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை **மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கும் தீர்மானத்துக்கு** மக்களவை ஒப்புதல் அளித்துள்ளது.
- எழுபது சதவீதத்துக்கும் அதிகமாக **சிறுபான்மை மாணவர்கள் பயிலும்** அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் **உணவு அரங்குகள் கட்டுவதற்கு மேற்கு வங்க அரசு** உத்தரவு பிறப்பித்துள்ளது.
- ஹஜ் புனித பயணம் மேற்கொள்வதற்கு **அனுமதிக்கப்பட்ட இந்தியர்களின் எண்ணிக்கையை 2 லட்சமாக** சவுதி அரேபிய அரசு அதிகரித்துள்ளது.
- பேரிடர் மீட்பு தொடர்பான **சர்வதேச கூட்டணியில் இணைய வேண்டும் என்று ஜி20 அமைப்பு நாடுகளுக்கு** பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.
- தொழிற்சாலைகளில் **இரவு நேரங்களில் பெண்களை பணியில் அமர்த்துவதற்கு** வழிவகை செய்யும் சட்டத் திருத்தத்துக்கு **கோவா அரசு ஒப்புதல்** அளித்துள்ளது.
- அமெரிக்காவின் கிரீன் பில்டிங் கவுன்சிலின் (USGBC), **LEEDஎன்ற பசுமை கட்டிட தர மதிப்பீட்டு** பட்டியலில் இந்தியாவின் முதல் பத்து மாநிலங்களின் பட்டியலில், மகாராஷ்டிரா **மாநிலம் முதல் இடத்தை** வகிக்கிறது.
- **கர்நாடகா மற்றும் தமிழ்நாடு** அடுத்தடுத்த இடங்களை வகிக்கின்றன.
- யானைகளுக்கான **இந்தியாவின் முதல் நீர் சிகிச்சை மருத்துவமனை** (water clinic, hydrotherapy treatment center) உத்திரபிரதேச மாநிலம் **மதுரா நகரில்** யமுனா நதிக்கரையில் திறக்கப்பட்டுள்ளது.

- இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான மணிப்பூருக்கு, **இம்பால் போரின்** (Battle of Imphal) **75-வது ஆண்டு நிறைவை** குறிக்கும் வகையில் **ஜப்பான் நாடு அமைதி அருங்காட்சியகம்** ஒன்றை ஏற்படுத்தி பரிசளித்துள்ளது.
- தொலைத் தொடர்புத் துறை அமைச்சகம் **மத்திய கருவிகள் அடையாளப் பதிவுகளை** (Central Equipment Identity Register – CEIR) வெளியிட முடிவு செய்திருக்கின்றது.
- நாடெங்கிலும் கைபேசிகளின் திருட்டு மற்றும் பரவலாகப் பயன்படுத்தப்படும் **போலிக் கைபேசிகளைக் கட்டுப்படுத்துவதற்காக** இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
- அடித்தட்டுப் பயனாளர்களுக்கு **தரமான மற்றும் மலிவு விலையில் மருந்துகளை வழங்குவதற்கான ஜம்மு மற்றும் காஷ்மீர்** அரசானது அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாநிலத்தின் முக்கியத் தொடர்புடைய மருத்துவமனைகளில் **18 அம்ரித் கடைகளைத் திறக்க** திட்டமிட்டுள்ளது.
- இந்தியாவில் மாவட்ட அளவில் **731 கிரிஷி விக்யான் கேந்திராக்களை** (KVKs – Krishi Vigyan Kendras) இந்திய அரசு அமைக்கவுள்ளது.
- இந்த கேந்திராக்கள் 2022 ஆம் ஆண்டில் **விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்காக** விவசாயச் சமூகங்களிடையே தொழில் நுட்பங்களை பரவச் செய்யவிருக்கின்றது.
- ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் **தனித்துவம் மிக்க ஒரு வெள்ளப் பேரிடர் வரைபடத்தை** வெளியிட்டுள்ளார்.
- 2018 ஆம் ஆண்டிற்கான **காவல் நிலையங்களின் தரவரிசையை** மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- இராஜஸ்தானின் பிகானிர் மாவட்டத்தில் உள்ள **கலு காவல் நிலையம் நாட்டின் சிறந்த காவல் நிலையமாக** தர வரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இத்தரவரிசையில் அந்தமான் நிக்கோபாரில் உள்ள **கேம்பெல் வளைகுடா காவல் நிலையம் இரண்டாவது** இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டின் தேனியில் உள்ள **பெரியகுளம் காவல் நிலையம் 8 -வது** இடத்தில் உள்ளது.
- இந்திய அரசு **சமக்ரா சிக்சா** என்ற திட்டத்தின் கீழ் **பெண் குழந்தைகளுக்கான தற்காப்புப் பயிற்சியை** அறிமுகப்படுத்தியுள்ளது.
- **"சமக்ரா சிக்சா"** என்பது பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையினால் தொடங்கப்பட்ட **பள்ளிக்கல்விக்கான ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட** திட்டமாகும்.
- பிரதான் மந்திரி **கிராமின் டிஜிட்டல் சக்சார்த்த அபியான்** திட்டத்தின் (PMGDISHA – Pradhan Mantri Grama Digital Saksharta Abhiyan) கீழ் ஏறத்தாழ **2.22 கோடி கிராம மக்களுக்கு டிஜிட்டல் கல்வி** வழங்கப்பட்டுள்ளதாக மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் **ரவி சங்கர் பிரசாத்** அறிவித்துள்ளார்.
- நாடெங்கிலும் **காச நோய் ஒழிப்பு மற்றும் அதற்குச் சிகிச்சையளிப்பு** ஆகியவற்றுக்கு உதவுவதற்காக **உலக வங்கியுடன் 400 மில்லியன் டாலர்** மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் **இந்தியா** கையெழுத்திட்டுள்ளது.
- DD இந்தியா தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவை, **பங்களாதேஷ் மற்றும் தென்கொரியா** ஆகிய இரு நாடுகளில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- தென் கொரியத் தூதர் **பாங் கில் ஷின்** மற்றும் ஜெய்ப்பூரைச் சேர்ந்த **பகவான்** மாகவீர் விக்லாங் **சஹாயாதா சமிதி** (BMVSS- Bhagwan Mahaveer Viklang Sahayata Samiti) ஆகியோர் இணைந்து **"ஜெய்ப்பூர் காலணி கொரியா"** என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளனர். இது மாற்றுத் திறனாளிகளுக்கு **செயற்கை உறுப்புகள், இடுக்கிகள்** மற்றும் பிற உபகரணங்களை இலவசமாக வழங்குகின்றது.

- **"பங்களா சஸ்யா நிவாஸ்"** என்ற பெயரில், **மேற்கு வங்க** மாநில அரசு, **விவசாயிகளுக்கு இலவச பயிர் காப்பீட்டுத் திட்டம்** ஒன்றினை அறிவித்துள்ளது.
- தேசிய ஜனநாயக் கூட்டணி அரசாங்கம் மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகத்தின் கீழ் **மத்திய புள்ளியியல் நிறுவனத்துடன் தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தை** இணைப்பதாக அறிவித்து இருக்கின்றது.
- அருணாசலப் பிரதேசத்தின் முதல்வராக, பாஜக மூத்த தலைவர் **பெமா காண்டு** மீண்டும் பதவியேற்றுக்கெண்டார். இவர் அருணாசலப் பிரதேசத்தின் **10-ஆவது முதல்வர்** ஆவார்.
- மனிதர்களை டெங்கு வைரஸ் தாக்கி பாதிப்பை ஏற்படுத்துவதற்கு முன்பே, **கொசுவில் டெங்கு வைரஸ் உள்ளதா என கண்டுபிடிக்கும் புதிய திட்டத்தை** இந்தியாவில் முதல் முறையாக பொது சுகாதாரத் துறை செயல்படுத்தி வருகிறது.
- கங்கை நதி நீரை **குடிநீராகவோ, குளிக்கவோ பயன்படுத்த இயலாது** என்று மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.
- குடியரசு தலைவர் மாளிகையில் நடந்த பிரம்மாண்ட விழாவில் **நரேந்திர மோடி மீண்டும் பிரதமராக** பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு குடியரசுத் தலைவர் **ராம்நாத் கோவிந்த்** பதவிப் பிரமாணம் செய்துவைத்தார். பிரதமர் மோடி, ராஜ்நாத் சிங், அமித் ஷா உட்பட **25 பேர் கேபினட் அமைச்சர்களாகவும் 33 பேர் இணையமைச்சர்களாகவும்** பொறுப்பேற்றுக் கொண்டனர். ஒட்டு மொத்தமாக மத்திய அமைச்சரவையில் **பிரதமர் உட்பட 58 பேர் இடம்** பெற்றுள்ளனர்.
- இதில் பிம்ஸ்டெக் கூட்டமைப்பைச் சேர்ந்த வங்கதேச அதிபர் **அப்துல் ஹமீது**, மியான்மர் அதிபர் **யு வின் மின்ட்**, இலங்கை அதிபர் **மைத்திரிபால சிறிசேனா**, தாய்லாந்து சிறப்பு தூதர் **கிரிசாத பூன்ராக்,** நேபாள பிரதமர் **சர்மா ஒளி**, பூடான் பிரதமர் **டாக்டர் லோடே ஷெரிங்** ஆகியோர் பங்கேற்றனர். மேலும் கிர்கிஸ்தான் அதிபர் **சூரோன்பாய் ஜீன்பேகோவ்**, மொரீஷியஸ் பிரதமர் **பிரவிந்த்குமார் ஜீக்நாத்தும்** விழாவில் கலந்து கொண்டனர்.

**மத்திய அமைச்சரவை பட்டியல்:**

- **பிரதமர் நரேந்திர மோடி** - பணியாளர் நலன், மக்கள் குறைதீர்ப்பு, ஓய்வூதியம் துறை, அணுசக்தி,
விண்வெளி, முக்கிய கொள்கை முடிவுகள், ஒதுக்கப்படாத இலாகாக்கள்.
- **ராஜ்நாத் சிங்** - பாதுகாப்பு
- **அமித் ஷா** - உள் துறை
- **நிதின் கட்கரி** - சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், குறு-சிறு-நடுத்தர தொழில்கள்
- **நிர்மலா சீதாராமன்** - நிதி, கம்பெனி விவகாரங்கள்
- **ராம்விலாஸ் பாஸ்வான்** - நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகம்.
- **நரேந்திர சிங் தோமர்** - வேளாண்மை, விவசாயிகள், உணவு மற்றும் பொது விநியோகம்.
- **ரவிசங்கர் பிரசாத்** - சட்டம் மற்றும் நீதி, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை
- **ஹர்சிம்ரத் கவுர் பாதல்** - உணவு பதனிடும் தொழில்கள்
- **தாவர் சந்த் கெலாட்** - சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல்
- **ஜெய்சங்கர்** - வெளியுறவு
- **ரமேஷ் பொக்கிரியால் நிஷாங்க்** - மனித வள மேம்பாடு
- **அர்ஜீன் முண்டா** - பழங்குடியினர் நலன்
- **ஸ்மிருதி இரானி** - மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, ஜவுளி
- **ஹர்ஷ்வர்தன்** - சுகாதாரம், குடும்ப நலத் துறை, அறிவியல் தொழில்நுட்பம், புவி அறிவியல்.
- **பியூஷ் கோயல்** - ரயில்வே, வர்த்தகம், தொழில்
- **கஜேந்திர சிங் ஷெகாவத்** - ஜல சக்தி

- ஐக்கிய நாடுகள் அமைப்பின் **மனித வாழ்விட திட்டத்தின்** (UN-Habitat), **சட்டமன்ற நிறைவேற்றுக் குழுவிற்கு** (Executive Board) **இந்தியா** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இந்திய அரசு தற்பொழுது பணியாற்றிக் கொண்டிருக்கும் தில்லி உயர் நீதிமன்ற நீதிபதியான **சங்கீதாதிங்ரா செஹல்** என்பவரின் தலைமையின் கீழ் **சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) தீர்ப்பாயத்தை** அமைத்துள்ளது.
- இது **தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை** (LITE – Liberation Tigers of Tamil Eelam) சட்ட விரோத அமைப்பாக அறிவிப்பதற்கு போதிய காரணம் உள்ளதா அல்லது இல்லையா என்பது குறித்து விசாரிக்கவிருக்கின்றது.
- மத்தியப் பிரதேசத்தின் **பன்டேல்கண்ட் பகுதியில் உள்ள ஓர்ச்சா நகரம்** யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தலங்களுக்கான உத்தேசப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
- மருத்துவ மற்றும் நறுமணத் தாவரங்களின் விளைச்சலை ஊக்குவிப்பதற்காக **"அரோமா திட்டம்"** என்ற ஒரு புதிய திட்டத்தை **மேகாலயா முதல்வர் கான்ராட் k. சங்மா** துவக்கி வைத்துள்ளார்.
- பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் **முதல் அமைச்சரவைக் கூட்டம்** டெல்லியில் நடைபெற்றது. இதில் குறு, சிறு விவசாயிகளுக்கு **ஆண்டுக்கு ரூ.6000 வழங்கும் திட்டத்தை** விரிவுபடுத்த ஒப்புதல் வழங்கப்பட்டது இதன் படி நாடு முழுவதும் **15 கோடி விவசாயிகள்** பயன்பெறுவார்கள்.
- குடிநீர் ஆதாரங்களைப் பாதுகாத்து மக்களுக்கு சுத்தமான குடிநீர் மற்றம் நீர்ப்பாசன திட்டங்களை செயல்படுத்த **'ஜல சக்தி'** என்ற புதிய அமைச்சகம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்துறையின் அமைச்சராக **கஜேந்திர சிங் ஷெகாவத்** நியமிக்கப்பட்டுள்ளார்.
- மத்திய அமைச்சரவையில் வெளியுறவுத் துறை அமைச்சராக **எஸ்.ஜெய்சங்கர்** நியமிக்கப்பட்டுள்ளார்.
- இதற்கு முன்பு ஐஎப்எஸ் அதிகாரி **நட்வர் சிங்** கடந்த 2004-ம் ஆண்டில் வெளியுறவுத் துறை அமைச்சராகப் பணியாற்றினார். அவருக்கு அடுத்து வெளியுறவுத் துறை அமைச்சர் பதவியை ஏற்கும் **2-வது ஐஎப்எஸ் அதிகாரி** என்ற பெருமை ஜெய்சங்கருக்கு கிடைத்துள்ளது.
- நாடு முழுவதும் **யோகா மையங்கள் உள்ள இடங்களை கண்டறிவதற்கு** பிரத்யேக செயலியை ஆயுஷ் அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- அந்த செயலியின் பெயர் **'யோகா லோகேட்டர்'** ஆகும்.
- தேசிய குடிமக்கள் பதிவேட்டின் (என்ஆர்சி) இறுதிப்பட்டியல் வெளியிடப்படும் போது **அஸ்ஸாம் முழுவதும் 1000 தீர்ப்பாயங்களை அமைக்க முடிவு** செய்யப்பட்டுள்ளது.
- மத்தியப் பிரதேச மாநிலம், **குவாலியர்-சம்பல் பிராந்தியத்தில்** துப்பாக்கி உரிமம் பெற விரும்புவோர், **மரக்கன்றுகளை நட்டு**, அத்துடன் சுயபடம் எடுத்து அனுப்ப வேண்டும் என்ற புதிய விதிகள் அமல்படுத்தப்பட்டுள்ளது.
- **கஸ்தூரி ரங்கன்** குழு பரிந்துரை செய்துள்ள புதிய தேசிய கல்விக் கொள்கையின் வரைவு அறிக்கைவெளியிடப்பட்டுள்ளது. இதில் **பள்ளிகளில் மும்மொழிக் கல்விக் கொள்கையை அமல்படுத்தி இந்தியை கட்டாயமாக்க வேண்டும்** என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவராக **சோனியா காந்தி** மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இந்தியாவில் கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு **வேலைவாய்ப்பின்மை 6.1 சதவீதமாக அதிகரித்துள்ளதாக** மத்திய புள்ளியியல் அமைச்சகம் அறிக்கையில் தெரிவித்துள்ளது.
- சர்வதேச யோகா தினத்தையொட்டி (IDY 2019) தேசிய அளவிலான நிகழ்ச்சியை நடத்த **டெல்லி, சிம்லா, மைசூரு, ஆமதாபாத் மற்றும் ராஞ்சி** ஆகிய 5 நகரங்களை மத்திய அரசு தேர்வு செய்துள்ளது.

- இராஜஸ்தான் மாநில அரசு அம்மாநிலத்தில் **இ-சிகரெட்டின் உற்பத்தி, விநியோகம், விளம்பரம்** மற்றும் **விற்பனை ஆகியவற்றைத் தடை** செய்வதற்கான தனது முடிவை அறிவித்துள்ளது.
- "டெல்லியில் மெட்ரோ ரயில்கள், அரசு பேருந்துகளில் **பெண்கள் இலவசமாக பயணம் செய்யலாம்"** என்று முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் அறிவித்துள்ளார்.
- நாட்டில் உள்ள மக்கள் தொகைக்கு நிகராக, **தேசிய நெடுஞ்சாலைகளில் 125 கோடி மரக்கன்றுகள் நடப்படும்** என மத்திய அமைச்சர் நிதியின் கட்கரி தெரிவித்துள்ளார்.
- ஆந்திராவில் **சிபிஐ மீதான தடையை நீக்க** புதிய முதல்வர் **ஜெகன்மோகன் ரெட்டி** முடிவு செய்துள்ளார்.
- 6-ஆம் வகுப்பு முதல் **3-ஆவது மொழியாக ஹிந்தியை கட்டாயமாக கற்க வேண்டும் என்ற திட்டத்தைமத்திய அரசு கைவிட்டு விட்டது.** இதுதொடர்பான முந்தைய வரைவு அறிக்கையில், சில திருத்தங்களைச் செய்து புதிய வரைவு அறிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
- தொழில் ரீதியாகவும், சுற்றுலாவாகவும் வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்வபர்களில் **இந்தியாவைச் சேர்ந்தவர்கள் இரண்டாமிடத்தில்** உள்ளனர். உலகளவில் தொழில்ரீதியாக பயணம் மேற்கொள்வோர் அதிகமுள்ள **31 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில்** இது தெரிய வந்துள்ளது.
- பஞ்சாயத்து அமைப்புகளை வலுப்படுத்தும் வகையில் **தேசிய கிராம சுயராஜ்ய திட்டத்துக்கு ரூ.7,255.50 கோடியை மத்திய அரசு ஒதுக்கீடு** செய்துள்ளது.
- பாரத மாதா ஜன்ஹித் அமைப்பின் தலைவர் **சுவாமி சத்ய மித்ரானந்த் கிரி மகாராஜ்** காலமானார்.
- இந்தியாவில் **புதிதாக 10 அணு உலைகள் அமைக்க** மத்திய அரசு ஒப்புதல் அளித்து, அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.
- நாடு முழுவதும் மக்களுக்கு கிடைக்கும் சுகாதார வசதி, மக்களின் வாழ்நாள், நோய் எதிர்ப்பு சக்தி உள்ளிட்ட **23 அம்சங்களின் அடிப்படையில்** மத்திய அரசின் **நிதி அயோக்** அமைப்பு ஆய்வு நடத்தி **சுகாதார குறியீடு பட்டியலை** வெளியிட்டுள்ளது. பெரிய மாநிலங்களின் பட்டியலில் **கேரளா** முதலிடம் பிடித்துள்ளது. **ஆந்திரா** 2 வது இடத்தையும் **மகாராஷ்டிரா** 3 வது இடத்தையும் பெற்றுள்ளன.
- கடந்த முறை **3-வது** இடத்தில் இருந்த **தமிழகம்** தற்போது **9வது** இடத்துக்கு பின்தங்கியுள்ளது.
- சிறிய மாநிலங்களில் **மிசோரம்** முதலிடத்தையும் **மணிப்பூர்** இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.

## பொருளாதாரம்

- காண்ட்லா - கோர்காபூர் இடையே **எல்பிஜி எரிவாயு குழாய்ப் பாதை** அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- மொத்தம் **2,757 கிமீ தொலைவுக்கு** அமையும் இந்த திட்டத்தை மேற்கொள்ள இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் **(ஐஓசி),** பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் **(பிபிசிஎல்),** இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் **(ஹெச்பிசிஎல்)** ஆகிய மூன்று நிறுவனங்களும் ஒப்புக் கொண்டுள்ளன.
- அதிகரித்துவரும் முதலீடு, பொதுமக்கள் நுகர்வு உள்ளிட்டவை காரணமாக **நாட்டின் பொருளாதார வளர்ச்சி அடுத்த 3 நிதியாண்டுகளுக்கு 7.5 சதவீதமாக இருக்கும்** என உலக வங்கி கணித்துள்ளது.
- பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் **நிதி அயோக் அமைப்பின் 5-வது ஆட்சியாளர்கள் குழு சந்திப்பு** ஜூன் 15-ம் தேதி நடைபெற்றது.

- வங்கிகளில் இணையதளம் வழியாக மேற்கொள்ளப்படும் **டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகளுக்கான கட்டணங்கள் ரத்து செய்யப்படுதவதாக** ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.
- தொடர்ந்து மூன்றாவது முறையாக ரிசர்வ் வங்கி **கடனுக்கான வட்டி விகிதத்தை 0.25 சதவீதம்** குறைத்துள்ளது. கடந்த **9 ஆண்டுகளில்** இல்லாத அளவாக இப்போது **வட்டி விகிதம் 5.75 சதவீதமாக** உள்ளது.
- நிறுவனங்களில் நிகழும் முறைகேடுகள், ஊழல் குற்றச்சாட்டுகளைத் தவிர்க்க, **நிறுவனங்களின் இயக்குநர்களுக்கு தேர்வு நடத்த** மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- கடந்த 11 ஆண்டுகளில் **ரூ.2.05 லட்சம் கோடி அளவில்** வங்கிகளில் கடன் உள்ளிட்ட **நிதி மோசடிகள்** நிகழ்ந்துள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) தெரிவித்துள்ளது.
- ஆஸ்திரேலியாவில் உள்ள **குயீன்ஸ்லாந்து** மாகாணத்தில் **நிலக்கரி சுரங்கம் அமைப்பதற்கான அனுமதி அதானி என்டர் பிரைசஸ் நிறுவனத்துக்கு** வழங்கப்பட்டுள்ளது.
- உலக வங்கி வரையறையின்படி **தனி நபர் தலா வருமானம் 2,000 டாலர்கள்** என்ற மதிப்புடன் கீழ்நிலையில் உள்ள **நடுத்தர வருமானம் ஈட்டும் நாடாக இந்தியா** வரையறை செய்யப்பட்டிருக்கின்றது.
- தானியங்கி பணமளிப்பு இயந்திரம் மூலம் **வங்கிகளுக்கு இடையேயான பரிமாற்றக் கட்டண அமைப்பு குறித்து ஆய்வு செய்வதற்காக** இந்திய வங்கிகள் மன்றத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான **விஜி கண்ணன்** தலைமையில் 6 நபர்கள் கொண்ட ஒரு குழுவை இந்திய ரிசர்வ் வங்கி அமைத்துள்ளது.
- **வாராக் கடன் சொத்துக்களை ஒருங்கிணைப்பதற்கு உதவுவதற்காக** பிஎன்பி வங்கித் தலைவரான **சுனில் மேத்தா** தலைமையிலான குழுவினால் பரிந்துரை அளிக்கப்பட்டும் இந்திய ரிசர்வ் வங்கியினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கு **"சசாக்த் திட்டம்"** என்று பெயரிடப்பட்டு இருக்கின்றது.
- 2018-19 ஆம் ஆண்டிற்கான **உணவு தானியங்கள் உற்பத்தி 283 மில்லியன் டன்கள்** என்று கணக்கிடப்பட்டுள்ளது.
- அமெரிக்காவில் இருந்து **இறக்குமதி செய்யப்படும்** 'வால்நட்' உள்ளிட்ட சில பருப்பு வகைகள் என **29 பொருள்களுக்கான இறக்குமதி வரி** ஜூன் 16 முதல் **அதிகரிக்கப்படுவதாக** மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இந்தியாவின் சேவை துறை ஏற்றுமதி **கடந்த ஏப்ரல் மாதத்தில் 1,806 கோடி டாலராக** அதிகரித்துள்ளது.
- தொழிலாளர் மாநில காப்பீடு **(இஎஸ்ஐ) திட்டத்துக்கான பங்களிப்பை அரசு 4 சதவீதமாகக்** குறைத்துள்ளது.
- பொதுத்துறையில் 2018-19 சென்ற நிதி ஆண்டில், **ரூ.26,716 கோடி நிகர லாபம் ஈட்டி ஓ.என்.ஜி.சி.நிறுவனம்** முதலிடம் பிடித்துள்ளது.
- இந்தியாவை வரும் **2024-ஆம் ஆண்டுக்குள் ரூ.350 லட்சம் கோடி (5 டிரில்லியன் டாலர்) பொருளாதார சக்தியாக உயர்த்த** இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- மே மாதம், இந்தியாவிலிருந்து செய்யப்பட்ட **ஏற்றுமதிகளின் அளவு 3.93 சதவீதமாக** உயர்ந்துள்ளது.
- ஸ்விஸ் வங்கிகளில் பதுக்கப்பட்டுள்ள **கருப்புப்பணத்தை வெளிக்கொண்டுவரும் முயற்சியில் 50 இந்தியர்களின் ஸ்விஸ் கணக்கு விவரங்களை** ஸ்விட்சர்லாந்து மற்றும் இந்திய ஒழுங்குமுறை மற்றும் அமலாக்கத்துறை அமைப்புகளுக்கு வழங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

- யாஷ் பிர்லா குழுமத்தின் தலைவர் **யஷோவர்தன் பிர்லாவை திட்டமிட்ட மோசடியாளர்** என அறிவித்துள்ளது **யுகோ வங்கி.**
- சரக்கு சேவை வரி (ஜிஎஸ்டி) கவுன்சிலின் **35-வது கூட்டம்** புதுதில்லி விஞ்ஞான் பவனில் மத்திய நிதியமைச்சர் **நிர்மலா சீதாராமன்** தலைமையில் நடைபெற்றது. தமிழக அரசு சார்பில் மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் **டி.ஜெயக்குமார்** பங்கேற்றார்.
- பொருளாதார இலக்குகளை அடைய **மத்திய அரசுடன், மாநில அரசுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்** என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.
- **லஷ்மி விலாஸ் வங்கியை** தங்களுடன் இணைத்துக் கொள்வதற்கான அனுமதியை இந்திய போட்டி ஆணையம் (சிசிஐ) வழங்கியுள்ளதாக **இந்தியாபுல்ஸ் ஹவுசிங் பைனான்ஸ் நிறுவனம்** தெரிவித்துள்ளது.
- இந்தியாவின் **அந்நியச் செலாவணி கையிருப்பு** ஜூன் 14-ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் **42,220 கோடி டாலராக (ரூ.29.55 லட்சம் கோடி) குறைந்துள்ளது** என ரிசர்வ் வங்கி புள்ளி விவரத்தில் தெரிவித்துள்ளது.
- **ஹுண்டாய்** நிறுவனத்துடன் இணைந்து **குறைந்த விலையிலான மின்சார கார்களைத்** தயாரித்து இந்தியாவில் அறிமுகப்படுத்த திட்டமிட்டிருப்பதாக **தென் கொரியாவைச்** சார்ந்த வாகனத் தயாரிப்பு நிறுவனமான **கியா மோட்டார்ஸ்** தெரிவித்துள்ளது.
- வெளிநாடுகளில் கடந்த **1980 முதல் 2010 ஆம்** ஆண்டு வரையிலான காலகட்டத்தில் இந்தியர்கள் பதுக்கி வைத்திருந்த **கருப்புப்பணம் 216 பில்லியன் டாலர் (ரூ.14 லட்சம் கோடி) முதல் 490 பில்லியன் டாலர் (ரூ.34 லட்சம் கோடி டாலர்) வரை இருக்கலாம்** என்று நாடாளுமன்றத்தில் கடந்த மார்ச் மாதம் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- ரிசர்வ் வங்கி துணை ஆளுநர் **விரல் ஆச்சார்யா,** தனது பதவியை **ராஜிநாமா** செய்துள்ளார்.
- நடப்பு 2019-20 -ஆம் நிதி ஆண்டில், **நாட்டின் பொருளாதார வளர்ச்சி 6.6 சதவீதமாக குறையும்** என பிட்ச் ரேட்டிங்ஸ் (Fitch Ratings) தெரிவித்து இருக்கிறது.
- இந்திய சர்வதேச பிரம்மாண்ட வணிகக் கண்காட்சியின் இரண்டாம் பதிப்பு கொல்கத்தாவின் **பிதான் நகரில்** (அல்லது சால்ட் லேக்) நடைபெற்றது.
- பெங்களூரைச் சேர்ந்த ஐடி நிறுவனமான **மைண்ட் ட்ரீயின் 51.8 சதவீத பங்குகளை எல் அண் டி நிறுவனம்** கைப்பற்றியுள்ளது.
- போர்ப்ஸ் பத்திரிக்கையினால் தொகுக்கப்பட்ட **"உலகின் மிகப்பெரிய 2000 பொது நிறுவனங்களின்"** பட்டியலில் முகேஷ் அம்பானி தலைமையிலான **ரிலையன்ஸ் தொழிற் நிறுவனமானது** இந்திய அளவில் **முதலாவது இடத்திலும்** சர்வதேச அளவில் **71-வது இடத்திலும்** உள்ளது.
- நிதி மோசடி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள **நீரவ்மோடி** மற்றும் அவருடைய சகோதரி **பூர்வி மோடி** ஆகிய இருவரது **நான்கு வங்கிக்கணக்குகளை சுவிட்சர்லாந்து** அரசு முடக்கியுள்ளது.
- வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் **இணைய வழி பணப்பரிவர்த்தனைக்கான** விவரங்களை, இருபத்தி நான்கு மணி நேரத்துக்குள் தெரிவிக்க வேண்டும் என்று ரிசர்வ் வங்கி வலியுறுத்தியுள்ளது.
- வங்கி மோசடியில் ஈடுபட்டு லண்டன் சிறையில் அடைக்கப்பட்டுள்ள வைர வியாபாரி **நீரவ் மோடியின் காவலை ஜூலை 15 வரை லண்டன் நீதிமன்றம்** நீட்டித்துள்ளது.
- **50 பைசா நாணயம் உட்பட** தற்போது புழக்கத்தில் இருக்கும் **அனைத்து நாணயங்களும் செல்லும்** என்று ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

- அமெரிக்காவும், சீனாவும் **மீண்டும் வர்த்தகப் பேச்சுவார்த்தை நடத்த** ஒப்புக் கொண்டுள்ளன. இதனால் சீன பொருட்கள் மீது அமெரிக்கா விதித்த **புதிய வரி விதிப்புகள்** இப்போதைக்கு அமலுக்கு வராது.
- மொத்த விலைக் குறியீட்டின் (அடிப்படை ஆண்டு 2011-2012) **தற்போதைய நிலையைத் திருத்தியமைப்பதற்காக** ஒரு பணிக் குழுவை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- இக்குழு நிதி ஆயோக்கின் உறுப்பினரான **ரமேஷ் சந்த்** என்பவரால் தலைமை தாங்கப்படவிருக்கின்றது.
- டாலருக்கு நிகரான **கரன்சி மதிப்பை முறை கேடு செய்து மாற்றுவதாக** சந்தேகிக்கப்படும் நாடுகளின் பட்டியலில் இருந்து **இந்தியாவை** அமெரிக்கா நீக்கியுள்ளது.
- இந்தியாவில் **அந்நிய நேரடி முதலீடு செய்வதில்** மொரீஷியஸைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக முதலீடு செய்து **சிங்கப்பூர் முதலிடத்தைப்** பிடித்துள்ளது.
- மாருதி சுஸீகி நிறுவனம் ரூ.24 கோடி முதலீட்டில் **சோலார் நிலையம்** ஒன்றை ஹரியானாவில் உள்ள **குருக்ராம்** என்ற இடத்தில் அமைக்க உள்ளது.
- ஆர்டிஜிஎஸ் மூலமாக செய்யப்படும் **பணப்பரிவர்த்தனைக்கான கால அளவு மாலை 6 மணி வரை** நீட்டிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வரும் **2020-21-ஆம் நிதியாண்டில் 7.1 சதவீதமாக இருக்கும்** என இந்திய வர்த்தக சபைகளின் கூட்டமைப்பு (ஃபிக்கி) தெரிவித்துள்ளது.
- இந்தியாவுக்கு அளித்து வந்த **வர்த்தக முன்னுரிமை (ஜிஎஸ்பி) நாடுகள் என்ற அந்தஸ்தை** அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ரத்து செய்துள்ளார்.
- சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) வசூல் **மே மாதத்தில் ரூ.1 லட்சம் கோடியை** தாண்டியுள்ளது என மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கி கார்ப்பரேட் கடன்களில் இரண்டாம் நிலை சந்தை வளர்ச்சிக்காக ஒரு பணிக்குழுவை, கனரா வங்கித் தலைவர் '**டி. என். மனோகரன்**' தலைமையில் அமைத்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கி, 'வீடமைப்பு நிதி பாதுகாப்பு சந்தை அபிவிருத்தி' க்காக ஒரு பணிக் குழுவை, '**ஹர்ஷ் வர்தன்**' தலைமையில் அமைத்துள்ளது.
- கடந்த 2018-19ம் நிதியாண்டில், **GDP, எனப்படும், மொத்த உள்நாட்டு உற்பத்தி**, ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு, **5.8 சதவீதமாக** சரிவடைந்துள்ளது.
- சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ளோரும் **நிதி குறித்த கல்வியறிவை பெறும் வகையில்** ரிசர்வ் வங்கி **ஜீன் முதல் வாரத்தை நிதி கல்வியறிவு வாரமாக** கடைபிடித்து வருகிறது.
- அந்த வகையில், இந்தாண்டுக்கான நிதி கல்வியறிவு வாரதிட்டம் **கேரளத்தில் ஜீன் 3-ஆம் தேதி** தொடங்கிவைக்கப்படவுள்ளது.
- இந்திய தொலைத் தொடர்பு **வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை கடந்த ஏப்ரல் மாதத்தில் 118.38 கோடியாக உயர்ந்துள்ளதாக** இந்திய தொலைத் தொடர்பு ஒழுங்கு முறை ஆணையம் **(டிராய்)** தெரிவித்துள்ளது.

## உலகம்

- மோசமான பொருளாதார நிலைமை காரணமாக வரும் நிதியாண்டுக்கான **பாதுகாப்புத் துறை பட்ஜெட் ஒதுக்கீட்டை தாமாக முன்வந்து குறைத்துக் கொள்ள** பாகிஸ்தான் ராணுவம் ஒப்புக்கொண்டுள்ளது.
- சட்ட விரோத அகதிகள் விவகாரத்தில் **மெக்ஸிகோ பொருள்களுக்கு கூடுதல் வரி விதிக்கும் தனது முடிவை** அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் காலவரையின்றி நிறுத்தி வைத்துள்ளார்.

- இலங்கை தேசிய உளவு அமைப்பின் தலைவர் **சிஸிரா மெண்டிஸை** அதிபர் மைத்ரிபால சிறீசேனா பதவியிலிருந்து நீக்கியுள்ளார்.
- கஜகஸ்தானில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற **ஜமாட்டோ கயேவ்,** அந்த நாட்டின் புதிய அதிபராக பொறுப்பேற்று உள்ளார்.
- தாய்லாந்தின் புதிய பிரதமராக **பிரயூத் சன்-ஓ-சா** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- போலி வங்கிக் கணக்குகள் தொடர்பான வழக்கில், **பாகிஸ்தான் முன்னாள் அதிபர் ஆசிஃப் அலி ஜர்தாரி** கைது செய்யப்பட்டுள்ளார்.
- விக்கிலீக்ஸ் துணை நிறுவனர் **ஜூலியன் அசாஞ் சேவை அமெரிக்காவுக்கு நாடு கடத்துவதற்கான** உத்தரவில் பிரிட்டன் உள்துறைச் செயலர் **சஜித் ஜாவித்** கையெழுத்திட்டுள்ளார்.
- ஹாங்காங்கில் கைது செய்யப்பட்டவர்களை சீன பெருநிலப் பகுதிக்கு **நாடு கடத்த வகை செய்யும் சட்ட மசோதாவுக்கு** கடும் எதிர்ப்பு எழுந்ததையடுத்து, அந்த மசோதாவை சட்டமாக்குவதற்கான நடவடிக்கைகள் **நிறுத்தி வைக்கப்படுவதாக ஹாங்காங் அரசு** அறிவித்துள்ளது.
- பிரபல விமானமான இலங்கை ஏர்லைன்ஸ் தொடர்ந்து 2-வது முறையாக **"உலகின் சிறந்த காலம் தவறாத ஏர்லைன்ஸாக"** பெயரிடப்பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் நாட்டில் ஒற்றைப் பயன்பாடு கொண்ட **நெகிழிப் பொருட்களுக்குத் தடை விதிக்கப்படும்** என்று கனடா நாட்டின் பிரதமர் ஜஸ்டின் டிரூடோ அறிவித்துள்ளார்.
- G-20ல் **முதலாவது சுழல் முறையிலான** தலைவர் பதவியை **ஜப்பான்** ஏற்றுள்ளது.
- ஈரான் வான் எல்லையில் **அத்துமீறி நுழைந்த அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக** அந்நாட்டு ராணுவம் அறிவித்துள்ளது.
- சர்வதேச யோகா தினம் (ஜூன் 21) **ஐ.நா சபையில் மிகச் சிறப்பாக** கொண்டாடப்பட்டது.
- இதுபோன்று யோகா தினம் **ஐ.நா.சபையில் கொண்டாடப்படுவது இதுவே முதல்** முறையாகும்.
- சீனா உருவாக்கிய **ஆளில்லா ஹெலிகாப்டர் 'ஏவி500'** வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டதாக அந்த நாட்டு அரசுக்குச் சொந்தமான **'குளோபல் டைம்ஸ்'** நாளிதழ் தெரிவித்துள்ளது.
- வரும் அக்டோபருக்குள் தீவிரவாத அமைப்புகளின் **பண பரிவர்த்தனைகளை தடுக்காவிட்டால் பாகிஸ்தானை கருப்புப் பட்டியலில் சேர்ப்போம்** என்று எஃப்ஏடிஎஃப் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.
- ஆப்கானிஸ்தானில் **அமைதியை ஏற்படுத்துவது குறித்து விவாதிப்பதற்கான மாநாடு,** பாகிஸ்தான் தலைநகர் **இஸ்லாமாபாத்** அருகே நடைபெற்றது.
- ஈரான் மீது **கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிப்பதாக** அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.
- ஈரான் அணு ஆயுதத் திட்டங்களை முடக்கும் வகையில் அந்நாட்டின் மீது **சைபர் (இணைய வழி) தாக்குதலை அமெரிக்கா** தொடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.
- **இலங்கையில் அதிபரின் அதிகாரத்தைக் குறைக்கும் அரசியல் சாசன சட்டப் பிரிவை நீக்க வேண்டும்** என்று அந்நாட்டு அதிபர் மைத்ரி பால சிறீசேனா வலியுறுத்தியுள்ளார்.
- இந்த வருட உலக ரத்தக் கொடையாளர் தினம் **ருவாண்டா நாட்டில்** கொண்டாடப்பட்டது.
- **இலங்கையில்** போதைப் பொருள் கடத்தல் மற்றும் புழக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக 43 **ஆண்டுகளுக்குப் பிறகு மரண தண்டனையை அமல்படுத்துவதற்கு** அதிபர் மைத்ரிபாலசிறிசேனா அனுமதி வழங்கி உள்ளார்.
- ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடு, வளைகுடா நாடுகளில், முதலாவதாக **'goAML'** என்ற புதிய **பணமோசடி தடுப்பு தளத்தை** அறிமுகப்படுத்தியுள்ளது.

- ஒழுங்கமைக்கப்பட்ட நிதிக் குற்றங்களைத் தடுப்பதற்காக **ஐக்கிய அரபு எமிரேட்ஸால் 'ஒரே இடத்தில் தீர்ப்பதற்காக'** தொடங்கப்பட்டுள்ளது.
- ஆஸ்திரேலிய பிரதமராக **ஸ்காட் மோரிஸன்** மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டார்.
- இஸ்ரேல் தேர்தலில் அதிக இடங்களைக் கைப்பற்றியும், பிரதமர் **பெஞ்சமின் நெதன்யாகுவால்** கூட்டணி அமைக்க முடியாத நிலையில், வரும் **செப்டம்பர் மாதம் மீண்டும் தேர்தலை நடத்த** அந்த நாட்டு நாடாளுமன்றம் தீர்மானித்துள்ளது.
- அமெரிக்காவில் வெறும் **245 கிராம்** எடையுடன் பிறந்த குழந்தை, **உலகிலேயே மிகக் குறைந்த எடையுடன் பிறந்து உயிர் பிழைத்த குழந்தை** என்ற பெருமையைப் பெற்றுள்ளது.
- பப்புவா நியூ கினியாவின் புதிய பிரதமராக, முன்னாள் நிதியமைச்சர் **சர்ஜேம்ஸ் மராபேவை** அந்த நாட்டு எம்.பி.க்கள் தேர்வு செய்துள்ளனர்.
- இலங்கையின் கொழும்பு துறைமுகத்தில் உள்ள **கிழக்கு சரக்கு கொள்கலன் முனையத்தை** (ECT – East Container Terminal) கூட்டாக மேம்படுத்த **இலங்கை, ஜப்பான் மற்றும் இந்தியா** ஆகியவை ஒரு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- பாகிஸ்தான் தூதராக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த **சிறப்பு வரிச் சலுகையை ரத்து செய்வதாக** அமெரிக்கா அறிவித்துள்ளது.
- அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பிக்கும் போது **பேஸ்புக், ட்விட்டர் போன்ற சமூக வலைதள முகவரி விவரங்களையும் இனி வழங்க வேண்டும்** என்ற புதிய விதியை அமெரிக்க அரசு கொண்டுவந்திருக்கிறது.
- **தெற்கு சூடான்** மீதான ஆயுதத் தடையை ஐ.நா. பாதுகாப்பு ஆணையம் **மேலும் 1 ஆண்டு காலத்திற்கு** நீட்டித்துள்ளது.

## இராணுவம்

- **இந்தியா-பிரான்ஸ் விமானப்படைகள்** இடையே **கருடா** என்ற பெயரில் தொடர்ந்து விமானப்படை பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.
- 2019-ஆம் ஆண்டிற்கான இந்தியா-பிரான்ஸ் விமானப்படைகள் பங்கேற்கும் கூட்டுப்பயிற்சி **பிரான்ஸ் நாட்டில்** 2019 ஜுலை மாதம் 1ஆம் தேதி முதல் 2 வாரங்களுக்கு நடைபெறவுள்ளது.
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட **அதிவேக ஆளில்லா விமானம்,** ஒடிஸாவின் அப்துல்கலாம் தீவில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை தளத்தில் முதல் முறையாக பரிசோதிக்கப்பட்டது.
- இந்த விமானம், **20 நொடிகளில் 32.5 கிமீ உயரத்துக்கு** பறக்கும் திறன் உடையது. அதிநவீன **ஸ்ராம்ஜெட் இன்ஜின் மூலம்** இயங்கக்கூடியது.
- அமெரிக்காவானது நிலப்பரப்பிலிருந்து வான் இலக்கைத் தாக்கி அழிக்கும் **தேசிய மேம்படுத்தப்பட்ட ஏவுகணை அமைப்பு - II** (NASAMS - II) என்பதினை இந்தியாவிற்கு விற்பனை செய்ய ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இது வான்வெளித் தாக்குதல்களிலிருந்து **தேசியத் தலைநகர்ப் பகுதியைப் பாதுகாப்பதற்கான** மேம்படுத்தப்பட்ட வான் பாதுகாப்பு அமைப்பாகும்.
- இந்திய விமானப்படை 100க்கும் மேற்பட்ட **ஸ்பைஸ் (SPICE)** குண்டுகளை வாங்குவதற்காக **இஸ்ரேல் அரசாங்கத்துடன் ரூ.300 கோடி மதிப்பிலான ஒப்பந்தம்** ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- பாலகோட் தாக்குதலானது இந்திய விமானப்படையால் **"பந்தர் நடவடிக்கை"** என் சங்கேதப் பெயரிடப்பட்டுள்ளது.
- இந்திய இராணுவமானது அதன் உயர்ந்த செயல்பாட்டு எச்சரிக்கை மற்றும் எல்லைப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைக்கு **'ஜாஃப்ரான் நடவடிக்கை'** எனப் பெயரிட்டுள்ளது

- வருடந்தோறும் நடைபெறும் **பன்னாட்டு அமைதிப்படை** இராணுவப் பயிற்சியான **கான் குவெஸ்ட் 2019** ஆனது மங்கோலியாவில் நடைபெற்றது.
- இது மங்கோலியா, சீனா, ஜெர்மனி மற்றும் **இந்தியா உள்ளிட்ட 38 நாடுகளின்** பங்களிப்பைக் கொண்டுள்ளது.
- இந்திய கப்பல்களின் பாதுகாப்பிற்காக **பாரசீக** வளைகுடா மற்றும் **ஓமன்** வளைகுடாவில் இந்திய கடற்படை **'ஆபரேஷன் சங்கல்ப்'** என்ற நடவடிக்கையை தொடங்கியுள்ளது. இந்த கடற்பகுதியை கடக்கும் **இந்திய கப்பல்களின் பாதுகாப்பிற்காக** இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- டெல்லியின் துணைநிலை ஆளுநரான அனில் பைஜால் புது தில்லியில் **வீர் நாரிகளுக்காக சஹாரா கடற்படை விடுதி** ஒன்றைத் துவக்கி வைத்தார். இது வீர் நாரிகள் எனப்படும் கடற்படை வீரர்களின் விதவைகளுக்கான ஒரு புதுமையான விடுதியாகும்.
- 10 சதவிகித அளவிலான **உள்நாடு உயிரி விமான எரிபொருளை** உள்ளடக்கிய கலப்பின விமான எரிபொருளைப் பயன்படுத்திப் பறந்திடுவதற்கு **இந்திய விமானப் படையின் AN -32** விமானத்திற்கு முறையாக பறப்பதற்கானச் சான்று அளிக்கப்பட்டுள்ளது.
- முப்படைக் குழுவின் தலைவராக இந்திய விமானப்படைத் தளபதி **பி.எஸ்.தனோவா** பொறுப்பேற்றுக் கொண்டார்.
- இந்திய விமானப் படையின் முதலாவது பெண் விமானப் பொறியாளர் **ஹீனா ஜெய்ஸ்வால்** ஆவார்.
- ஜார்கண்ட் மாநிலத்தில் இருந்து வரும் இந்திய விமானப் படையின் முதலாவது பெண் விமானி **அமன்நிதி** ஆவார்.
- அதிநவீன போர் விமானத்தை தனியே இயக்கி, இந்திய விமானப் படையின் **முதல் பெண் போர் விமானி** என்ற பெருமையை **லெப்டினென்ட் மோகனா சிங்** பெற்றுள்ளார்.
- Mi – 17 V5 வானூர்தியில் பறந்த முதலாவது பெண் விமானி **பரூல் பரத்வாஜ்** ஆவார்.

## மாநாடுகள்

- 2020 ஆம் ஆண்டின் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதத்தில் **திரிபுரா** மாநிலத்தில் **10வது தேசிய அறிவியல் திரைப்படத் திருவிழா** (National Science Film Festival of India - NSFFI) நடத்தப்பட விருக்கின்றது.
- சர்வதேச தொழில்முனைவு மாநாட்டின் (Global Enterperneurship Summit - GES) 9-வது பதிப்பு **நெதர்லாந்தின் ஹேக்கில்** நடைபெற்றது.
- இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய **Quad என்றறியப்படும் அலுவல்சாரா மூலோபாய குழுவின்** நாற்கரப் பாதுகாப்பு பேச்சு வார்த்தையானது தாய்லாந்தின் **பாங்காங்கில்** நடைபெற்றது.
- அர்ஜென்டினாவின் பியூனஸ் அயர்ஸில் **2-வது உலக மாற்றுத் திறனாளிகள் சந்திப்பு** (Global Disability Summit) நடைபெற்றது.
- 2019 ஆம் ஆண்டின் சர்வதேச யோகா தினக் கொண்டாட்டங்களுக்கு வலு சேர்க்கும் விதமாக இரண்டு நாட்கள் நடைபெறக் கூடிய ஒரு **"யோகா மகாஉத்சவத்தை"** ஆயுஷ் அமைச்சகம் புது தில்லியில் நடத்தியது.
- மாநில அளவிலான **பேரிடர் மீட்புப் படையை மேம்படுத்துவது தொடர்பான தேசிய மாநாட்டை** மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா டெல்லியில் தொடங்கி வைத்தார்.
- உணவுத்துறையில் வளர்ந்து வரும் முதலீட்டை அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சியின் ஒரு பகுதியாக **'உலக உணவு இந்தியா நிகழ்வு'**, நவம்பர் 1-4 தேதிகளில் **புதுதில்லியில்** நடைபெற உள்ளது.

- ஐக்கிய நாடுகள் சபையின் **பாலைவனமாக்கலுக்கு எதிரான மாநாட்டின்** (UNCCD), **14 வது அமர்வு,** முதல் முறையாக இந்தியாவில் செப்டம்பர் 2 முதல் 14 தேதி வரை **புதுதில்லியில்** நடைபெறுகிறது.
- 23 வது **பச்சியோன் சர்வதேச புகழ்பெற்ற திரைப்படத் திருவிழா** (BiFAN – 2019) தென்கொரியாவில் நடைபெற்றது.
- 2019 ஆம் ஆண்டின் **சிந்து தர்ஷன் திருவிழாவின்** 23- வது பதிப்பானது காஷ்மீரின் லே என்ற பகுதியில் உள்ள **சிந்து காட் ஷேய்** என்ற இடத்தில் அனுசரிக்கப்பட்டது.
- **தெலுங்கானா** மாநில அரசு, மத்திய வேளாண் துறை அமைச்சகத்துடன் இணைந்து மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் **சர்வதேச விதைப் பரிசோதனை கூட்டமைப்பு மாநாட்டை** (ISTA – International Seed Testing Association) **ஹைதராபாத்தில்** நடத்தியது.
- **வர்த்தகம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் மீதான G-20** அமைச்சரவை மட்டத்திலான சந்திப்பு ஜப்பானிய நகரான ஃப்யுகூவோகாவில் (Fukuoka) நடைபெற்றது.
- யூதப்படுகொலையின் நினைவாக 2020 அக்டோபரில் **யூதப்பகைமைக்கு எதிரான ஒரு சர்வதேச மாநாட்டை சுவீடன்** நடத்தவுள்ளது.
- ஜப்பான் நாட்டின் **புகாகோ** நகரில் ஜி20 நாடுகளின் **நிதி அமைச்சர்கள் மற்றும் ரிசர்வ் வங்கி தலைவர்கள் கூட்டம்** (G20 Finance Miniters and Central Bank Governors Meeting 2019) நடைபெற்றது.
- **பத்தாவது உலகத் தமிழ் அராய்ச்சி மாநாடு,** அமெரிக்காவின் **சிகாகோவில் உள்ள சாம்பர்க்** கருத்தரங்கு மையத்தில் வரும் ஜுலை 4-ஆம் தேதி முதல் 7-ஆம் தேதி வரை 4 நாள்கள் நடைபெறவுள்ளது.
- "**நமஸ்தே தாய்லாந்து**" எனும் இரண்டு நாள் திரைப்பட விழாவானது **டெல்லியில்** நடைபெற்றது.
- கம்போடியாவின் தகவல் துறை அமைச்சகம் மற்றும் ஒளிபரப்பு வளர்ச்சிக்கான **ஆசிய-பசிபிக் நிறுவனம்** (AIBD – Asia Pacific Institute for Broadcasting Development) ஆகியவை இணைந்து 2019 ஆம் ஆண்டின் **16-வது ஆசிய ஊடக மாநாட்டை** கம்போடியாவின் **சியேம் ரீப்** மாகாணத்தில் நடத்தின.
- ஐ.நா- வாழ்விட மன்றத்தின் முதலாவது அமர்வு (2019 UN-Habitat Assembly), **நைரோபி நகரில்** நடைபற்றது.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO- Shanghai Cooperation Organization) **இரண்டாவது வெகுஜன ஊடகக் கூட்டம் பிஷ்கெக்கில்** (கிர்கிஸ்தானின் தலைநகரம்) நடைபெற்றது.

## விருதுகள்

- சுயமாக முன்னேறிய **முதல் 80 அமெரிக்க பணக்கார பெண்களுக்கான 'ஃபோர்ப்ஸ்'** பத்திரிகையின் பட்டியலில், **இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 3 பேர்** இடம் பெற்றுள்ளனர்.
- அந்தப் பட்டியலில், இந்தியவம்சாவளியைச் சேர்ந்த, அரிஸ்டா நெட்வொர்க்ஸ் நிறுவனத்தின் தலைமைச் செயலதிகாரி **ஜெயஸ்ரீ உல்லால் (58),** தகவல் தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனமான சின்டலின் நிறுவனர் **நீரஜா சேத்தி** (64), கன்ஃப்ளுயன்ட் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைமை தொழில்நுட்ப அதிகாரி **நேஹா நர்கேடே (34)** ஆகிய மூவரும் இடம் பெற்றுள்ளனர்.
- மாலத்தீவு சென்றுள்ள பிரதமர் **நரேந்திர மோடிக்கு** அந்நாட்டின் உயரிய விருது வழங்கி கவுரவிக்கப்பட்டுள்ளது. **'நிஷான் இஸ்ஸுதீன்'** விருதை பிரதமர் மோடிக்கு அதிபர் சோலி வழங்கி கவுரவித்தார்.

- பிரபல ஆங்கில எழுத்தாளர் **அமிதாவ் கோஷுக்கு 54-வது ஞானபீட விருது** வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- ஆங்கிலத்தில் நாவல்களையும், கட்டுரைகளையும் எழுதியுள்ள அமிதாவ் கோஷ், **ஞானபீட விருது பெறும் முதல் ஆங்கில எழுத்தாளர்** என்ற பெருமையை பெற்றுள்ளார்.
- 2019-ஆம் ஆண்டுக்கான **பால சாகித்ய புரஸ்கார் விருது** தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் **தேவி நாச்சியப்பனுக்கு** (தெய்வானை) வழங்கப்படுகிறது. சிவகங்கை மாவட்டம், காரைக்குடியைச் சேர்ந்த இவர் **குழந்தைகள் இலக்கிய துறைக்கு ஆற்றிய** ஒட்டு மொத்த பங்களிப்புக்காக இந்த விருதுக்குத் தேர்ந்தெடுக்கபட்டுள்ளார்.
- **யுவ சாகித்ய புரஸ்கார் விருது** தமிழ்ப் பிரிவில் எழுத்தாளர் **சபரிநாதனின் 'வால்' கவிதை நூலுக்கு** வழங்கப்பட்டுள்ளது.
- இந்தியா - பாலஸ்தீனத்துக்கு இடையேயான நல்லுறவை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றிய **இந்திய வம்சாவழி நபர் ஷேக் முகமது முனீர் அன்சாரிக்கு (91), 'ஸ்டார் ஆஃப் ஜெருசலேம்'** விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டுக்கான **'மிஸ் இந்தியா'** அழகி பட்டத்தை **ராஜஸ்தானைச்** சேர்ந்த இளம்பெண் **சுமன்ராவ்** வென்றுள்ளார்.
- இந்த ஆண்டுக்கான இந்திய அழகிப் போட்டியில் சத்தீஸ்கரைச் சேர்ந்த இளம்பெண் **ஷிவானி ஜாதவ் இரண்டாமிடமும்** (மிஸ் இந்தியா-2019), பிகாரைச் சேர்ந்த **ஷ்ரேயா சங்கர்** என்ற இளம்பெண் **மூன்றாமிடமும்** (மிஸ் இந்தியா யுனைடெட் காண்டினென்ட்ஸ்-2019) பிடித்துள்ளனர்.
- இந்திய சமகாலக் கலைஞரான **நளினி மலானி** என்பவர் 2019 ஆம் ஆண்டிற்கான **7-வது ஜோன் மிரோ** விருதை வென்றுள்ளார்.
- உலகில் மிகவும் புகழ்பெற்ற இந்த சமகாலக் கலை விருதை வென்ற **முதலாவது இந்தியக் கலைஞராக** இவர் உருவெடுத்துள்ளார்.
- இந்த விருதானது பார்சிலோனாவைச் சேர்ந்த **பண்டாசியோ ஜோன் மிரோவால்** வழங்கப்படுகின்றது.
- அமெரிக்க நாவலாசிரியரான **தயாரி ஜோன்ஸ்,** தனது நான்காவது புதினமான **"அமெரிக்கத் திருமணம்"** என்பதற்காக இந்த ஆண்டின் **புனைவுப் பிரிவில் பெண்கள் விருதை** வென்றுள்ளார்.
- யோகா பயிற்சியை பிரபலப்படுத்தியதற்காக **பிரதமரின் விருது** அறிவிக்கப்பட்டுள்ளது.
- யோகாவை மக்களிடம் கொண்டு சென்று பணியாற்றி வருவதற்காக குஜராத்தின் வாழ்வியக்கம் அமைப்பின் **சுவாமி ராஜஶ்ரீ முனி,** இத்தாலியின் **அன்டோனிட்டா ரோசி** ஆகிய இருவருக்கும் **தனிநபர்கள் பிரிவின் கீழ்** விருது வழங்கப்படுகிறது.
- **பிஹார் யோகா பள்ளி,** ஜப்பானைச் சேர்ந்த **ஜப்பான் யோகா நிகேதன்** ஆகியவை விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளன. விருது பெறுவோருக்கு **கோப்பை, சான்றிதழ்** மற்றும் **25 லட்சம் ரூபாய் பணப்பரிசும்** வழங்கப்படும்.
- ஆங்கில மொழியில் உள்ள நாவல்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதான **சர்வதேச டப்ளின் இலக்கிய விருது,** இந்த ஆண்டு அமெரிக்காவைச் சார்ந்த **எமிலி ரஸ்கோவிச்சின் 'ஐடஹோ'** (Idaho) நாவலுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.
- சினிமா உலகில் வழங்கிய தமது சிறந்தப் பங்களிப்பிற்காக **புகழ்வாய்ந்த JC டேனியல்** எனும் விருதிற்கு மலையாள நடிகையும் திரைப்பட இயக்குநருமான **ஷீலா** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- **அமெரிக்கா மற்றும் சீனா** ஆகிய நாடுகளுக்கிடையேயான உறவுகளுக்கு தனது பங்களிப்புகளை அங்கீகரிக்கும் விதமாக அரசியல் மேதைமைக்கான **ஜார்ஜ் எச். டபிள்யூ புஷ் விருதை** அமெரிக்காவின் முன்னாள் அதிபர் **ஜிம்மி கார்ட்டர்** பெற்றுள்ளார்.
- கிர்கிஸ்தான் நாட்டின் **மிக உயர்ந்த தேசிய விருது** SCO அமைப்பு உறுப்பு நாடான **சீன நாட்டின் அதிபர் 'ஜி ஜின்பிங்'** அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- **"Manas Order of the First Degree"** என்ற இந்த அவ்விருது அண்மையில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டில் வழங்கப்பட்டது.

- சிற்பி பாலசுப்பிரமணியம் தலைமையில் இயங்கிவரும் **சிற்பி அறக்கட்டளை, கவிஞர் தேவதச்சனுக்கு** 24 -ம் ஆண்டுக்கான சிற்பி இலக்கிய விருதை அறிவித்துள்ளது.
- **'விரல்களில் வழியும் குரலற்றவனின் செங்குருதி'** நூலுக்காகக் கவிஞர் **சோலை மாரியப்பனுக்கு சிற்பி இலக்கியப் பரிசையும், டார்கெட் ஜூரோ** சுற்றுச்சூழல் வனப்பாதுகாப்பு அமைப்புக்கு **பொ.மா. சுப்பிரமணியம் விருதையும்** சிற்பி அறக்கட்டளை அறிவித்துள்ளது.
- 2019 -ம் ஆண்டுக்கான **ஸ்பாரோ- ஆர். தியாகராஜன் விருது,** தமிழ்க்கவிதைக்குப் பல்லாண்டு கவிதைப் பங்களிப்புக்காக **யுவன் சந்திரசேகருக்கும்,** நம்பிக்கையூட்டும் **கவிஞர் கீதா சுகுமாரனுக்கும்** அறிவிக்கப்பட்டுள்ளது.
- வேற்றுமொழி விருது இந்த ஆண்டு **பஞ்சாபிக் கவிஞர் எிம்ரத் ககனுக்கு** வழங்கப்படுகிறது.
- **கத்தார் ஏர்வேஸ்** நிறுவனமானது 2019 ஆம் ஆண்டிற்கான **ஸ்கைட்ராக்ஸ்** உலக விமான விருதுகள் மற்றும் மிக உயர்ந்த விருதான **"உலகின் சிறந்த விமான நிறுவனம்"** உள்ளிட்ட **4 விருதுகளைப்** பெற்றுள்ளது.
- மலையாளத் திரைப்படமான **"வெயில் மரங்கள்" பிஜுகுமார் தாமோதரன்** என்பவரால் இயக்கப்பட்டது. 22வது **ஷாங்காய் சர்வதேசத் திரைப்படத்** திருவிழாவின் போது **"தலைசிறந்த கலைத்திறன் வாய்ந்த சாதனைக்கான"** விருதை வென்ற **முதலாவது இந்தியத் திரைப்படம்** இதுவாகும்.
- செரம் இந்தியா நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் **சைரஸ் பூனாவாலா** ஆவார். உயிர்காக்கும் மருந்து மற்றும் மக்கள் சேவை போன்ற துறைகளில் இவருடையப் பணிக்காக, **ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திலிருந்து கௌரவப் பட்டத்தை** இவர் பெற்றுள்ளார்.
- இந்தியப் பத்திரிக்கைத் துறையில் சிறப்பு வாய்ந்த விருதானது **"2019 - ஆம் ஆண்டின் பத்திரிக்கையாளர்"** என்ற பிரிவில் **ரச்னா கைரா** (தி டிரிபியூன் செய்திகள் சேவைகள்) என்பவருக்கு வழங்கப்பட்டது.
- 2017- ஆம் ஆண்டுக்கான கேரள அரசின் **'ஸ்வதேஷ் அபிமானி-கேசரி விருது' டிஜேஸ் ஜார்ஜ்** அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- கேரள அரசு சார்பில் **மூத்த பத்திரிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருது** ஸ்வதேஷ் அபிமானி- கேசரி விருது ஆகும்.
- அமெரிக்காவில் **'2019 டீன் ஜியோபார்டி'** என்ற தலைப்பில் நடந்த தனிநபர் டி.வி. வினாடி - வினா போட்டியில், இந்திய வம்சாவளி மாணவர் **அவி குப்தா** வெற்றி பெற்றுள்ளார்.
- ஸ்வீடனைச் சேர்ந்த இளம் பருவநிலை ஆர்வலரான **கிரேட்டா துன்பெர்க்** என்பவர் "அம்னெஸ்டி இன்டர்நேஷனலின் 2019 ஆம் ஆண்டிற்கான **மனச் சாட்சியின் தூதர்"** என்ற விருதை வென்றுள்ளார்.
- 2019 ஆம் ஆண்டிற்கான **ஐக்கிய நாடுகள் நிலநடுக்கோட்டு விருதை** தெலுங்கானா மாநில தக்காண வளர்ச்சி சமூகத்தின் பெண்கள் அமைப்புகள் பெற்றுள்ளன.
- 2018-19 ஆம் ஆண்டிற்கான, ஆசிய வணிகம் & சமூக மன்றத்தின் (Asian Business & Social Forum), **"உலகளாவிய ஆசியர் விருது"** (Global Asian of the Year 2018-19), **டாக்டர் ஹேமா திவாகர்** அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ஜெர்மனி நாட்டில் நடைபெற்ற, நான்காவது பசுமை மற்றும் நிலையான வேதியியல் மாநாட்டில், 2019-ஆம் ஆண்டிற்கான **வேதியியல் பரிசு**, புனே நகரை சேர்ந்த இந்திய அறிவியலாளர் ' **டாக்டர், அங்குர் பட்வர்தன்**' அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இலங்கை எழுத்தாளர் **கய் குணரத்ன (**Guy Gunaratne)

  2019- ஆம் ஆண்டிற்கான 'ஸ்வான்சீ பல்கலைக்கழகத்தின் **சர்வதேச டிலான் தோமஸ் பரிசு**' (Swansea university international Dylan Thomas prize) வென்றுள்ளார். கய் குணரத்ன, "**In our Mad and Furious city**" என்ற தனது முதல் நாவலுக்கு இந்த விருதை பெற்றுள்ளார்

- "ஐக்கிய நாடுகள் நீடித்த வளர்ச்சி இலக்குகள் **சுகாதாரத் துறையில் 10 மிகவும் செல்வாக்கான நபர்**" என்ற விருது சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் இந்தியாவின் பதஞ்சலி குழும நிறுவனங்கள் சார்பாக பதஞ்சலி ஆயுர்வேத நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான **ஆச்சார்யா பாலகிருஷ்ணாவிற்கு** வழங்கப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டின் பொதுச் சுகாதாரத்திற்கான **டாக்டர் லீ ஜோங்-ஊக் நினைவு விருதை** இந்திய மருத்துவ ஆராய்ச்சி ஆணையப் பொது இயக்குநரகப் பேராசிரியரான **பால்ராம் பார்கவா** என்பவர் பெற்றுள்ளார்.
- 72-வது **கேன்ஸ் திரைப்படத் திருவிழாவின்** போது **தென் கொரியாவைச்** சேர்ந்த திரைப்பட இயக்குனரான **போங் ஜோன் ஹோ** என்பவரின் "**பாரசைட்**" என்ற திரைப்படத்திற்காக அவர் "**பால்ம் டிஓர்**" என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- 2019 ஆம் ஆண்டின் ஐசிசி கிரிக்கெட் உலகக் கோப்பையின் ஒரு பகுதியாக சச்சின் ரசிகர் **சுதிர் கௌதம்**, கோலி ரசிகர் **சுகுமார்**, பாகிஸ்தானின் **சச்சா அப்துல் ஜலீல்**, வங்க தேசத்தின் **சோயப் அலி**, இலங்கையின் **கயன் சேனன்நாயகே** ஆகியோர்களுக்கு **முதல் உலக விளையாட்டு ரசிகர் விருது** வழங்கப்பட விருக்கின்றது.
- இந்திய எழுத்தாளரான **அன்னி சைதி** என்பவர் 2019 ஆம் ஆண்டிற்கான **9 டாட்ஸ் விருதின்** வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.
- 9 டாட்ஸ் விருது என்பது **சமகால சமூகப் பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கான படைப்பாக்கக்** கருத்திற்காக வழங்கப்படும் ஒரு விருதாகும்.
- முன்னாள் குடியரசுத் தலைவர் **பிரதீபா பாட்டீல்** அவர்களுக்கு மெக்ஸிகோ நாட்டினால் வெளிநாட்டினருக்கு அளிக்கப்படும் மிக உயரிய விருதான "**ஆர்டன் மெக்ஸிகனா டெல் அகுலா அஸ்டெகா**' என்ற விருது வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விருதை பெறும் முதல் இந்திய பெண், **பிரதீபா பாட்டீல்** ஆவார்.
- உலக சுகாதார அமைப்பானது (WHO-World Health Organisation) புகையிலையை கட்டுப்படுத்தும் துறையில் **இராஜஸ்தான் மாநிலம்** நிகழ்த்திய சாதனைகளை அங்கீகரிக்கும் விதமாக இந்த ஆண்டின்**உலக சுகாதார அமைப்பின் விருதுக்கு,** அம்மாநிலத்தின் மருத்துவ மற்றும் சுகாதாரத் துறையைத் தேர்ந்தெடுத்துள்ளது.

## நியமனங்கள்

- இந்திய வானிலை ஆய்வு மையத்தின் புதிய இயக்குநராக **பிரபல விஞ்ஞானி மிருத்யுஞ்ஜய் மஹாபாத்ரா** நியமிக்கப்பட்டுள்ளார்.
- அமெரிக்க நாடாளுமன்றத்தின் **பிரதிநிதிகள் சபை இடைக்காலத் தலைவராக**, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த **பிரமீளா ஜெயபால்** பொறுப்பு வகித்தார். ஜனநாயகக் கட்சி எம்.பி.யான பிரமீளா ஜெயபால்தான், நாடாளுமன்ற **கீழவைத் தலைவர் இருக்கையில் அமர்ந்த முதல் தெற்கு ஆசியப் பெண்** என்பது குறிப்பிடத்தக்கது.
- கோவா மாநிலத்தில் யோகாவை மேம்படுத்துவதற்காக (Goa's brand ambassador) புதிய விளம்பரத் தூதராக **நம்ரதா மேனன்** நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஜப்பானைச் சேர்ந்த **நிஸான் நிறுவனத்தின்** இந்திய செயல்பாடுகளுக்கான தலைவராக **சினன் ஓஸ்கோக்** (49) நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த **வீரேந்திர குமார் (65)** மக்களவை இடைக்கால தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தேசிய வடிவமைப்பு-ஆராய்ச்சி மன்ற இயக்குநராக **விஞ்ஞானி வி.டில்லி பாபு** நியமிக்கப்பட்டுள்ளார்.

- தெற்காசிய அரசியல் விவகாரங்களில் அனுபவம் நிறைந்த **சன் வெய்டோங்கை** இந்தியாவுக்கான புதிய தூதராக சீனா நியமித்துள்ளது.
- **மெர்ஸிடிஸ்-பென்ஸ்** நிறுவனத்தின் இந்திய விற்பனை மற்றும் சந்தைப்படுத்துதல் பிரிவு தலைவராக **சந்தோஷ் ஐயர்** நியமிக்கப்பட்டுள்ளார்.
- **இலங்கை** உளவுத் துறை அமைப்பின் புதிய தலைவராக **மேஜர் ஜெனரல் ருவன் குலதுங்கா** நியமிக்கப்பட்டுள்ளார்.
- வெளிநாட்டு வர்த்தக தலைமை இயக்குநர் **(டிஜிஎஃப்டி) அலோக் வர்தன் சதுர்வேதி**யின் பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- ஸ்வீடனைச் சேர்ந்த இளம் பருவநிலை ஆர்வலரான **கிரேட்டா துன்பெர்க்** என்பவர் "அம்னெஸ்டி இன்டர்நேஷனலின் 2019 ஆம் ஆண்டிற்கான **மனச் சாட்சியின் தூதர்**" என்ற விருதை வென்றுள்ளார்.
- 2019 ஆம் ஆண்டிற்கான **ஐக்கிய நாடுகள் நிலநடுக்கோட்டு விருதை** தெலுங்கானா மாநில தக்காண வளர்ச்சி சமூகத்தின் பெண்கள் அமைப்புகள் பெற்றுள்ளன.
- இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பானது (OIC – Organisation of Islamic Cooperation) சவுதி அரேபியாவைச் சேர்ந்த **யூசெப் அல்டோபெக்** என்பவரை ஜம்மு காஷ்மீருக்கான சிறப்புத் தூதராக அறிவித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான 4 ஆண்டுகளுக்கு **உலகச் சுகாதார நிறுவனத்தின்** (World Health Organization WHO) **வெளித் தணிக்கையாளராக** இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளரான **இராஜீவ் மெஹ்ரிஷி** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- **ராஜீவ் குமார்** மீண்டும் நிதி அயோக்கின் (NITIAayog) **துணைத் தலைவராக** நியமிக்கப்பட்டுள்ளார்.
- மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்தின் (CVC) **இடைக்கால ஆணையராக, 'சரத்குமார்'** நியமிக்கப்பட்டுள்ளார்.
- மக்களவைத் தலைவர், துணைத்தலைவர் ஆகியோர் இல்லாத நேரங்களில் **அவையை நடத்துவதற்கான குழுவுக்கு 4 எம்.பி.க்கள்** நியமிக்கப்பட்டுள்ளனர்.
- **ரமாதேவி, கீர்த்தி பி.சோலங்கி, ராஜேந்திர அகர்வால், மீனாட்சி லேகி** ஆகிய நால்வரையும் மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா நியமித்துள்ளார்.
- IBBI எனப்படும் **திவால் மற்றும் வாராக் கடன் வாரியத்தின்** பகுதி நேர உறுப்பினர்களாக தலைமை பொருளாதார ஆலோசகர் **'கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன்'** மற்றும் IDBI வங்கியின் முன்னாள் நிர்வாக இயக்குநரும், தலைமைச் செயல் அதிகாரியுமான **'பி.ஸ்ரீராம்'** ஆகியோரை நியமித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
- இந்திய ஆளுமையான வரலாற்று அறிஞர், எழுத்தாளர் **டாக்டர் ரொமிலா தாபர், அமெரிக்க தத்துவ சமூக** (American Philosophical Society) **அமைப்பில்** உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- டென்மார்க் நாட்டின் **'இங்கர் ஆண்டர்சன்'** (Inger Andersen) ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தின் (UNEP) **புதிய நிர்வாக இயக்குநராக** (Executive Director) பொறுப்பேற்றுள்ளார்.
- தெலங்கானா, இமாசலப் பிரதேசம் ஆகிய 2 மாநில உயர்நீதிமன்றங்களுக்கு புதிய தலைமை நீதிபதிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- தெலங்கானா உயர்நீதிமன்ற நீதிபதி - **ராகவேந்திர சிங் சௌஹான்**
- இமாசலப் பிரதேச உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி - **வீ.ராமசுப்ரமணியம்**
- தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நியமனங்களுக்கான **அமைச்சரவைக் குழுக் கூட்டம்** நடைபெற்றது. இதில்**'ரா' உளவு அமைப்பின்** புதிய தலைவராக ஐ.பி.எஸ். அதிகாரி **சமந்த் குமார் கோயலை** நியமிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

- **ஐ.பி. புலனாய்வு** அமைப்பின் புதிய தலைவராக மூத்த ஐ.பி.எஸ்.அதிகாரி **அரவிந்த் குமாரை** நியமிக்கவும் ஒப்புதல் வழங்கப்பட்டது. 2 பேரின் **பதவிக்காலமும் 2 ஆண்டுகள் ஆகும்.**
- சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தலைவராக, **இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் நரிந்தர் பத்ரா** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது **முதல்முறையாக 2 பெண் ஆராய்ச்சியாளர்களை** சந்திரனுக்கான இந்தியாவின் இரண்டாவது திட்டமான **சந்திராயன்-2 திட்டத்திற்குத் தலைமை தாங்க** நியமித்துள்ளது.
- **ரிது கரிதால்** இத்திட்டத்தின் பணி இயக்குநராகவும், **முத்தையா வனிதா** இதன் திட்ட இயக்குநராகவும் பணியாற்றுவர்.
- நிதி ஆயோக் அமைப்பின் **தலைமைச் செயல் அதிகாரியாக உள்ள அமிதாப் காந்தியின்** பதவிக் காலம் மேலும் **2 ஆண்டுகள்** நீட்டிக்கப்பட்டுள்ளது.
- எஃப்.ஐ.இ.ஓ. எனப்படும் **இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பின் தலைவராக சரத்குமார் சராஃப்** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) **புதிய நிர்வாக இயக்குநராக** (Executive Director) **டாக்டர் ரபி என் மிஸ்ரா** (Dr. Rabi N. Mishra) நியமிக்கப்பட்டுளார்.
- சர்வதேச சிவில் விமான அமைப்பு (ICAO) கவுன்சிலில், இந்தியாவின் பிரதிநிதியாக **'ஷெபாலி ஜூன்ஜா'** (Shefali Juneja) நியமிக்கப்பட்டுள்ளார்.
- அமெரிக்க **பாதுகாப்பு செயலாளராக** ராணுவ உயர் அதிகாரி **மார்க் எஸ்பர்** என்பவரை அமெரிக்க அதிபர் டிரம்ப் நியமித்துள்ளார்.
- ஐ.நா. பொதுச் செயலாளர் அண்ட்டோனியோ குட்டேரஸ் என்பவர் வள மேலாண்மை, நீடித்த தன்மைமற்றும் பங்குரிமை ஆகியவற்றிற்கான **பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தலுக்கான** ஐ.நா நிறுவனத்தின் (United Nations Entity for Gender Equality and the Empowerment of Women (UN-Women) for Resource Management Sustainability and Partnerships) துணை நிர்வாக இயக்குனராக **அனிதா பாட்டியாவை** நியமித்துள்ளார்.
- முதன்மை தலைமை வனப் பாதுகாவலரும், அரசு ரப்பர் கழகத்தின் தலைவருமான **'பி.துரைராசு'**, முதன்மை தலைமை வனப்பாதுகாவலராக (துறைத் தலைவர்) நியமிக்கப்பட்டுள்ளார்.
- தேசிய பாதுகாப்பு ஆலோசகராக **அஜித் தோவல் (74) மீண்டும்** நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், **மத்திய கேபினட் அமைச்சருக்கு இணையான அதிகாரமும்** அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- **இந்திய கடலோர காவல் படையின்** புதிய இயக்குநராக தமிழகத்தை சேர்ந்த **கே. நடராஜன்** நியமிக்கப்பட்டுள்ளார்.

## மறைந்தவர்கள்

- ஞான பீட விருது பெற்ற **பன்முகக் கலைஞர் கிரீஷ் கர்னாட்** உடல் நலக்குறைவால் காலமானார்.
- இவருக்கு 1998-ஆம் ஆண்டில் **ஞானபீட விருது,** 1974-இல் **பத்மஸ்ரீ**, 1992-இல் **பத்மபூஷண்** விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன.
- நாடக இயக்குநர், நடிகர், கதாசிரியர், வசனகர்த்தா என்று பன்முகத் திறன் கொண்ட **கிரேஸி மோகன்** சென்னையில் காலமானார். அவருக்கு **வயது 66.**
- புதுச்சேரி முன்னாள் முதல்வர் **ஜானகிராமன்** (78) காலமானார்.
- திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அடுத்த **காரிக்கோட்டை** கிராமத்தைச் சேர்ந்தவர் வடிவேல் (105). நேதாஜி சுபாஸ் சந்திர போஸின் **இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றிய** இவர், உடல் நலக்குறைவால் காலமானார்.

- **விக்கிரவாண்டி தொகுதி** திமுக **சட்டப்பேரவை உறுப்பினரும்,** கட்சியின் விழுப்புரம் மத்திய மாவட்ட அவைத் தலைவருமான **கு.ராதாமணி** உடல்நலக்குறைவால் (ஜூன் 14) காலமானார்.
- தமிழக **சட்டம், ஒழுங்கு டிஜிபியாக** பணியாற்றி ஓய்வு பெற்றவரும், **சிபிஐயில் அதிக காலம்** பணியாற்றியவருமான **வி.ஆர்.லட்சுமி நாராயணன்,** உடல் நலக் குறைவால் காலமானார்.
- பிரபல மிருதங்கக் கலைஞரான **தஞ்சாவூர் ராமமூர்த்தி** தன்னுடைய 90- வது வயதில் திருச்சியில் காலமானார்.
- பழம்பெரும் நடிகையும், முன்னணி பெண் இயக்குநராகத் திகழ்ந்தவருமான **ஜி.விஜயநிர்மலா** காலமானார். 44 திரைப்படங்களை இயக்கிய **ஒரே பெண் இயக்குநர் என்ற சாதனையை படைத்து கின்னஸ் புத்தகத்தில்** இடம் பெற்றுள்ளார்.

## பட்டியல்

- **உலகின் அமைதியான நாடுகள் பட்டியலில் இந்தியா** 5 இடங்கள் பின்தங்கி, **141-ஆவது இடத்தைப்** பெற்றுள்ளது. ஐரோப்பிய நாடான **ஐஸ்லாந்து** இந்த ஆண்டும் பட்டியலில் **முதலிடத்தைப்** பெற்றுள்ளது. இந்தப் பட்டியலில் **ஆப்கானிஸ்தான் கடைசி இடம்** பெற்றுள்ளது.
- சமூகப் பாதுகாப்பு, உள்நாட்டு மற்றும் சர்வதேச பிரச்னைகள், நாட்டில் ராணுவத்தின் செயல்பாடு ஆகியவற்றை அளவீடுகளாகக் கொண்டு **ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான நிறுவனம்** உலக நாடுகளின் அமைதி குறித்து ஆய்வு நடத்தியது. ஆய்வின்முடிவில் உலகின் அமைதியான நாடுகள் பட்டியலை அந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. **163 நாடுகளில்** இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான **பொருளாதார போட்டித்தன்மை தரவரிசையில்** மிகவும் போட்டிமிக்க பொருளாதாரமாக **இந்தியா** ஒரு இடம் முன்னேறி **43-வது இடத்தில்** தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- இந்தத் போட்டித்திறன் தரவரிசையில் **சிங்கப்பூர் முதலிடத்தில்** உள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- சீனாவின் **ஷாங்டாங்** மாகாணத்தையொட்டிய கடல் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த தனது கப்பலில் இருந்து **லாங் மார்ச்-11 ரக ராக்கெட்டை** சீனா விண்ணில் செலுத்தி உள்ளது.
- இதுபோன்ற **நடமாடும் ஏவுதளத்திலிருந்து சீனா ராக்கெட் செலுத்துவது** இதுவே முதல்முறையாகும்.
- **பார்வைத்திறன் குறைபாடுள்ள மாற்றுத்திறனாளிகள்** நவீன ஸ்மார்ட் போன்களைப் பயன்படுத்துவதில் பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. இதை சரிசெய்யும் முயற்சியாக புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டு **'கீ4 கீபோர்டு'** என்ற புதிய செயலியை அண்ணா பல்கலைக்கழக **முன்னாள் பேராசிரியர் வெ.கிருஷ்ணமூர்த்தி** வடிவமைத்துள்ளார்.
- சர்வதேச விண்வெளி நிலையம், அடுத்த ஆண்டு முதல் **விண்வெளி சுற்றுலாவுக்குச் செல்ல விரும்பும் பயணிகளுக்காகத் திறக்கப்படும்** என்று நாசா தெரிவித்திருக்கிறது. சர்வதேச விண்வெளி நிலையத்தில் **ஒரு நாள் இரவு தங்குவதற்கு** ரூபாய் மதிப்பில் **2.4 கோடி கட்டணம்** நிர்ணயித்திருக்கிறது நாசா.
- ஒரு கிரெடிட் கார்டுக்கு **(கடன் அட்டை) சமமான பிளாஸ்டிக் பொருட்களை மனிதர்கள்** வாரந்தோறும் உட்கொண்டு வருவதாக சர்வதேச ஆய்வறிக்கை ஒன்று அதிர்ச்சியூட்டும் தகவலை வெளியிட்டுள்ளது.

**சந்திரயான் –2**

- நிலவை ஆய்வு செய்வதற்காக **சந்திரயான் - 2 விண்கலம் வரும் ஜூலை மாதம் 15-ம் தேதி அதிகாலை 2.51 மணிக்கு** ஸ்ரீஹரி கோட்டாவில் இருந்து விண்ணில் செலுத்தப்படும் என இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (இஸ்ரோ) தலைவர் கே.சிவன் அறிவித்துள்ளார்.
- சந்திரயான் - 2 விண்கலத்தில் **ஆர்பிட்டர், லேண்டர், ரோவர்** ஆகிய 3 பகுதிகளையும் **ஜிஎஸ்எல்வி எம்கே - 3 ராக்கெட்** சுமந்து செல்கிறது. இதில் லேண்டருக்கு **விக்ரம்** என்றும், ரோவருக்கு **பிரக்யான்** என்றும் பெயரிடப்பட்டுள்ளது.
- சந்திரயான்-2 விண்கலம் விண்ணில் ஏவப்பட்ட பிறகு முதலில் அது **தனது சுற்றுவட்டப் பாதையில்** சுற்றி வரும். அதன் பிறகு **நிலவின் சுற்றுப்பாதைக்கு** மாறும்.
- நிலவின் மேற்பரப்பை அடைந்த பிறகு **லேண்டரும், ரோவரும் தனியாகப் பிரிந்து** சென்று நிலவின் **தென் துருவ தரைப் பகுதியை** அடையும். பின்னர் லேண்டரில் இருந்து விடுபடும் ரோவர் வாகனம் **நிலவில் ஆய்வுகளை** மேற்கொள்ளும்.
- இதில் மொத்தம் **13 வகையான கருவிகள், நவீன முப்பரிமாண கேமராக்கள்** பொருத்தப்பட்டுள்ளன.
- விண்ணில் ஏவப்பட்ட **14-வது நாளில் சந்திரயான்-2 நிலவை எட்டி ஆய்வுகளை** தொடங்கும். சந்திரயான்-2 தான் நிலவின் **தெற்கு பகுதியை ஆய்வு செய்வதற்காக அனுப்பப்படும் முதல் விண்கலம்.** இந்தப் பகுதியில் இதுவரை உலகில் வேறு **எந்த நாடும் ஆய்வு செய்ததில்லை.**
- சந்திரயான் -2 விண்கலம் **ரூ.603 கோடி செலவிலும்,** அதனை செலுத்தும் ஜிஎஸ்எல்வி எம்கே - 3 ராக்கெட் **ரூ.375 கோடி செலவிலும்** உருவாக்கப்பட்டுள்ளன. இதன் **மொத்த எடை 3.8 டன் ஆகும்.**
- வரும் 2030-ஆம் ஆண்டில் இந்தியா சார்பில் **விண்வெளியில் ஆய்வு மையம் அமைக்கப்படும்** என்று இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் (இஸ்ரோ) தலைவர் **கே.சிவன்** தெரிவித்துள்ளார்.
- இந்த விண்வெளி ஆய்வு மையம் **20 டன் எடை** கொண்டதாக இருக்கும். இதில் விண்வெளி வீரர் **15 முதல் 20 நாள்கள்** வரை தங்கி ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள முடியும். இப்போது **அமெரிக்கா, ரஷியா, சீனா** ஆகிய நாடுகள் மட்டுமே விண்வெளியில் ஆய்வு மையங்களை அமைத்துள்ளன. இது தவிர **அமெரிக்கா, ரஷியா, ஜப்பான், கனடா** மற்றும் **ஐரோப்பிய நாடுகள்** இணைந்து சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை அமைத்துள்ளன. இந்த வரிசையில் **இந்தியாவும்** இணையும்.
- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாதுகாப்பிற்கான அமைச்சரவைக் குழுவானது **விண்வெளிப் பாதுகாப்பு ஆராய்ச்சி அமைப்பை** (DSRA – Defence Space Research Agency) அமைக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.
- DSRA ஆனது **விண்வெளிப் போர் சார்ந்த ஆயுத அமைப்புகள்** மற்றும் **தொழில் நுட்பங்கள்** ஆகியவற்றை உருவாக்கும் பணியை மேற்கொள்ளும்.
- 'பிட்காயின்' போன்ற **மெய்நிகர் நாணயத்தை** பிரபல சமூக வலைதள நிறுவனமான முகநூல் **(ஃபேஸ்புக்) 'லிப்ரா' என்ற பெயரில்** அறிமுகப்படுத்தி உள்ளது.
- 2018 -ம் ஆண்டில், **உலகளாவிய கார்பன் உமிழ்வு 2 சதவீதம் அதிகரித்திருப்பதாக** பிரிட்டனைச் சேர்ந்த **'பிபி' (BB)** ஆற்றல் நிறுவனத்தின் ஆய்வு தெரிவிக்கிறது. உலகின் ஆற்றல் தேவையும் கார்பன் உமிழ்வும் அதிவேகமாக வளர்ந்து வருவதால், **உலகம் நிலையற்ற பாதையில் பயணிப்பதாக** இந்த ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.
- உலகின் **முதல் நிலவில் அமைந்துள்ள நூலகமானது** 30 மில்லியன் பக்கங்களைக் கொண்டுள்ளது.
- இது **இஸ்ரேல் நாட்டிலிருந்து** அனுப்பப்பட்டு நிலவில் மோதி தரையிறங்கிய **பேர்ஷீட் விண்கலத்திலிருந்து** ஏப்ரல் 12 அன்று பறக்கவிடப்பட்டது.

- மிகப்பெரிய யோகா தின நிகழ்வின் நடைபெறும் இடம், பங்கேற்பாளர்கள், நடத்துபவர்கள், பயிற்றுனர்கள், தன்னார்வலர்கள் இணைதல் ஆகியவை குறித்த விரிவான தகவல்களைப் பெற **புவன் எனும் கைபேசிசெயலியை ISRO ஆனது** உருவாக்கியுள்ளது.
- இலங்கையின் முதல் செயற்கைக்கோளான **'ராவணா-1'** சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து **அதன் சுற்றுவட்டப் பாதையில் வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டதாக** தகவல்கள் தெரிவிக்கின்றன.
- **'எரீஸ்'** எனப்படும் மேஷ விண்மீன் குழாமில் அமைந்துள்ள குறு விண்மீனை சுற்றிவரும் **இரு கோள்கள், பூமியை ஒத்த சூழலில் அமைந்துள்ளதாக** ஜெர்மனி விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.
- இமயமலையிலிருந்து **பனி உருகுவது கடந்த 2000-ஆம் ஆண்டைப் போல் இரண்டு மடங்காகியுள்ளதாக** அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக் கழக ஆய்வு மையம் தெரிவிக்கிறது.
- நீர் மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவக் கூடிய **புதிய ரக ஏவுகணையை ('பலிஸ்டிக்' ரக ஏவுகணையான (எஸ்எல்பிஎம்) ஜேஎல்-3) சீனா** வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.
- சனிக் கிரத்தை சுற்றி வரும் மிகப் பெரிய நிலவான **டைட்டனில் ஆளில்லா விமானம் மூலம் ஆய்வு நடத்த** அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா திட்டமிட்டுள்ளது.
- அமெரிக்காவை சேர்ந்த **ஸ்பேஸ் எக்ஸ்** (Spacex), நிறுவனம் **'ஸ்டார்ட்லிங்'** விண்மீன் (Starlink constellation) திட்டத்தின் மூலம், முதலாவது **60 செயற்கைக்கோள்களை** விண்ணில் செலுத்தியுள்ளது.
- உலக சுகாதார அமைப்பு (World Health Organization – WHO) ஜெனீவாவில் சமீபத்தில் நிறைவு பெற்ற **72-வது உலக சுகாதார மாநாட்டின் போது "உடல் சோர்வு"** நிலையை ஒரு மருத்துவ நிலைமையாக முதன்முறையாக வகைப்படுத்தியுள்ளது.
- அமெரிக்காவில் உள்ள சிக்காகோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் **மைனஸ் 23 டிகிரி செல்ஷியஸ்** வெப்ப நிலையில் கடத்தும் திறன் கொண்ட **"லாந்தனம் சூப்பர்ஹைட்ரைட்ஸ்"** என்ற ஒரு மீக்கடத்தியை உருவாக்கி சாதனை படைத்துள்ளனர்.
- இந்தியாவின் **ஒரே ஓராங்குட்டான் பின்னி** ஆகும்
- இது, தனது 41-வது வயதில் ஒடிசாவின் **நந்தன்கனன் விலங்கியல் பூங்காவில்** காலமானது.
- அருணாச்சலப் பிரதேசத்தின் தவாங் மாவட்டத்தில் **ஒரு புதிய சாண வண்டு இனம்** கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த இனம் **எனோப்ளோடி ரூப்பீஸ் தவான்ஜென்சிஸ்** என்று பெயரிடப்பட்டுள்ளது.
- தேசியப் பசுமைத் தீர்ப்பாயமானது (NGT- National Green Tribunal) **கங்கை நதியில்** மாசுபாடுகளைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்காததற்காக **பீகார், ஜார்க்கண்ட் மற்றும் மேற்கு வங்காளம்** ஆகிய மாநிலங்களுக்கு **தலா ரூ. 25 லட்சத்தை அபராதமாக** விதித்துள்ளது.
- **கோவாவின்** மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் **குடக்ருமியா** (Kudakrumia) பேரினத்தை சேர்ந்த, ஒரு புதிய குளவி இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த குளவி இனத்திற்கு **'குடக்ருமியா ரங்கனேகரி'** (Kudakrumia rangnekari) என்ற சிறப்புப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் காற்று மாசபாடு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக **"ஹவா ஆனா தி"** என்ற பாடலை வெளியிட்டுள்ளது.

# விளையாட்டுகள்

- வங்காளதேச அணியின் **ஷகிப் அல்-ஹசன்,** ஒருநாள் கிரிக்கெட்டில் 250 விக்கெட் மற்றும் 5 ஆயிரம் ரன்களுக்கு மேல் எடுத்துள்ள **5-வது வீரர்** என்ற சிறப்பை பெற்றுள்ளார்.
- பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டி **மகளிர் ஒற்றையர் பிரிவில்** ஆஸ்திரேலியாவின் இளம் வீராங்கனை **ஆஷ்லி பார்டி முதன்முறையாக** சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
- தாய்லாந்தின் புரிராம் நகரில் நடைபெற்ற 4 நாடுகள் **கிங்ஸ் கோப்பை கால்பந்து போட்டியில்** 1-0 என்ற கோல் கணக்கில் தாய்லாந்தை வென்று **இந்திய அணி 3-ஆவது இடத்தைப் பெற்றது.**
- உலகக் கோப்பை போட்டிகளில் மட்டும் **இந்திய அணி வீரர்கள் 27 சதங்களை விளாசி முதல் இடத்தில்** உள்ளனர். **ஆஸ்திரேலியா** 26 சதங்களுடன் 2-வது இடத்தில் இருக்கிறது.
- ஆஸ்திரேலியாவுக்கு எதிராக **2000 ரன்களை எடுத்த நான்காவது வீரர்** என்ற சிறப்பை **ரோஹித் சர்மா** பெற்றுள்ளார். **சச்சின்** 3077, **டெஸ்மான்ட் ஹெயின்ஸ்** 2262, **விவ் ரிச்சர்ட்ஸ்** 2187, ஆகியோர் முதல் மூன்று இடத்தில் உள்ளனர்.
- பாரிஸில் நடைபெற்ற கிராண்ட்ஸ்லாம் பந்தயமான **பிரெஞ்சு ஓபன் ஆடவர்** ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் ஆஸ்திரிய வீரர் **டொமினிக் தீமை** 6-3, 5-7, 6-1, 6-1என்ற செட் கணக்கில் வீழ்த்தி **12-ஆவது முறையாக சாம்பியன் பட்டம்** வென்று **ரபேல் நடால்** சாதனை படைத்துள்ளார்.
- இத்தாலியின் கிராஸெட்டா நகரில் நடைபெற்ற **உலக பாரா கிராண்ட்ப்ரீ போட்டியில்** ஆடவர் ஈட்டி எறிதலில் இந்தியாவின் **சந்தீப் சௌதரி, சுமித்** உலக சாதனை படைத்தனர். எப் 44 பிரிவில் 65.80 மீ தூரம் எறிந்து **தங்கம்** வென்றார் சந்தீப். சுமித் **60.45 மீ தூரம்** எறிந்து **வெள்ளி** வென்றார். இது எப்64 பிரிவில் உலக சாதனையாகும்.
- **சுந்தர் சிங் குர்ஜார்** 58.99 மீதூரத்துடன் 3-ஆவது இடத்தைப் பெற்றார். **3 பேரும் 2020 டோக்கியா பாராலிம்பிக் போட்டிக்கு தகுதி** பெற்றனர்.
- ஐ.சி.சி நடத்தும் **மூன்று விதமான கோப்பைகளையும் வென்ற** ஒரே கிரிக்கெட் கேப்டன் **எம்.எஸ். தோனி** ஆவார். **2007-ல்** ஐசிசி டி20 உலகக் கோப்பை, **2011-ல்** ஐசிசி உலகக் கோப்பை, **2013-ல்** ஐசிசி சாம்பியன் டிராபி என மூன்று கோப்பைகளையும் தட்டிக்கொண்டு வந்தார்.
- ஐரோப்பிய கால்பந்து கூட்டமைப்பின் **யுஇஎப்ஏ நேஷன்ஸ் லீக் கால்பந்து போட்டியில் போர்ச்சுக்கல்** சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.
- உலகக் கோப்பை போட்டியில் **அதிகபட்ச ரன்கள் எடுக்கப்பட்ட 5-வது ஆட்டமாக** இந்தியா, ஆஸ்திரேலியா ஆட்டம் அமைந்தது. இரு அணிகளின் ஸ்கோரையும் சேர்த்து 09.06.19 அன்று நடந்த ஆட்டத்தில் **668 ரன்கள்** குவிக்கப்பட்டன.
- சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து **ஓய்வு பெறுவதாக** இந்திய கிரிக்கெட் வீரர் **யுவராஜ் சிங்** அறிவித்துள்ளார்.
- யுவராஜ் சிங், இதுவரை இந்திய அணிக்காக **304 ஒருநாள் போட்டிகளில்** விளையாடியுள்ளார். அதில் 14 சதம், 52 அரை சதங்களுடன் **8,701 ரன்களை** அவர் குவித்துள்ளார். ஒருநாள் போட்டிகளில் **111 விக்கெட்டுகளும்,** டெஸ்ட் போட்டிகளில் **9 விக்கெட்டுகளையும்** சாய்த்துள்ளார்.
- 40 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அவர் **1,900 ரன்கள்** சேர்த்துள்ளார். இதில் 3 சதங்கள், 11 அரை சதங்கள் அடங்கும்.
- 2007-ம் ஆண்டு நடைபெற்ற **டி 20 உலகக்கோப்பையில்,** இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் ஸ்டுவர்ட் பிராட் வீசிய ஓவரில் **6 பந்துகளையும் சிக்ஸர் விளாசி சாதனை** படைத்தவர் யுவராஜ் சிங்.
- உலகில் அதிக வருவாய் ஈட்டும் விளையாட்டு வீரர்கள் தொடர்பாக **'ஃபோர்ப்ஸ்' பத்திரிக்கை** வெளியிட்டுள்ள பட்டியலில் ஒரே **இந்தியராக கிரிக்கெட் கேப்டன் விராட் கோலி** இடம் பிடித்துள்ளார்.

TENKASI AKASH FRIENDS IAS ACADEMY

- ஃபோர்ப்ஸின் அந்தப் பட்டியலில் கோலி 17 இடங்கள் இறங்கி, தற்போது **100-வது இடத்தில்** உள்ளார்.
- உலகின் அதிக வருவாய் ஈட்டும் விளையாட்டு வீரராக அர்ஜெண்டீனா கால்பந்து வீரர் **லயோனல் மெஸ்ஸி முதலிடத்தில்** இருக்கிறார்.
- சர்வதேசத் தடகளக் கூட்டமைப்பு மன்றம் (International Association of Athletics Federations), **"உலகத் தடகளம்"** என்று தனது பெயரைத் தானே மாற்றிக் கொண்டுள்ளது.
- உலகக் கோப்பையில் **3 சதங்கள் பதிவு செய்த** முதல் இங்கிலாந்து வீரர் என்ற சிறப்பை **ஜோ ரூட்** பெற்றுள்ளார்.
- இந்தியாவைச் சேர்ந்த **நிஹால் சரின்** FIDE மதிப்பீட்டுப் பட்டியலில் 2600 புள்ளிகளைப் பெற்ற **உலகின் மூன்றாவது இள வயது வீரராக** உருவெடுத்துள்ளார்.
- எப்ஐஎச் **ஆடவர் ஹாக்கி சீரிஸ் பைனல்ஸ்** போட்டியில் **இந்திய அணி** 5-1 என்ற கோல் கணக்கில் **தென்னாப்பிரிக்காவை வீழ்த்தி சாம்பியன்** பட்டம் வென்றது.
- பாகிஸ்தானுக்கு எதிராக மான்செஸ்டரில் நடைபெற்ற உலகக் கோப்பை ஆட்டத்தில் **இந்திய கேப்டன் விராட்கோலி துரிதமாக 11,000 ரன்களை கடந்து புதிய உலக சாதனையை** படைத்துள்ளார். ஏற்கெனவே இந்திய ஜாம்பவான் சச்சின் **276 ஆட்டங்களில் 11,000 ரன்களை** கடந்து சாதனை படைத்திருந்தார். இந்நிலையில் விராட்கோலி வெறும் **222 ஆட்டங்களில் 11,000 ரன்களை கடந்து** சச்சின் சாதனையை முறியடித்துள்ளார். **சச்சின், கங்குலியுடன் 11 ஆயிரம் ரன்களை கடந்த மூன்றாவது இந்திய வீரர்,** சர்வதேச அளவில் **9-ஆவது வீரர்** என்ற சிறப்பையும் பெற்றுள்ளார் கோலி.
- உலக **வில்வித்தை சாம்பியன்ஷிப்** போட்டியில் ஆடவர் ரெக்கர்வ் பிரிவில் **இந்திய அணி வெள்ளிப்பதக்கம்** வென்றது.
- இந்தியாவுக்காக **அதிக ஒரு நாள் போட்டிகளில் விளையாடிய 2-வது வீரர்** என்ற பெருமையை **எம்.எஸ்.தோனி** பெற்றுள்ளார். அவர் **341 போட்டிகளில்** விளையாடியுள்ளார். **சச்சின் 463** போட்டிகளில் விளையாடி **முதலிடத்தில்** உள்ளார்.
- உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் **மீண்டும் பாகிஸ்தானை இந்திய அணி வீழ்த்தி** உள்ளது.
- இதுவரை உலகக் கோப்பைப் போட்டிகளில் **7 முறை பாகிஸ்தானை இந்தியா** தோற்கடித்துள்ளது.
- இந்திய வீரர் **ரோஹித் சர்மா** ஒரு நாள் போட்டிகளில் **24-வது சதமடித்து** (140 ரன்கள்) சாதனை புரிந்துள்ளார்.
- மேலும் உலகக்கோப்பை போட்டிகளில் **பாகிஸ்தானுக்கு எதிராக சதமடித்த 2-வது வீரர்** என்ற பெருமையை **ரோஹித்** பெற்றுள்ளார். முன்னதாக 2015 உலகக் கோப்பையில் பாகிஸ்தானுக்கு எதிராக **விராட் கோலி** சதமடித்திருந்தார். உலகக் கோப்பை போட்டிகளில் **பாகிஸ்தானுக்கு எதிராக அதிகபட்ச ரன்கள் குவித்த வீரர்** என்ற பெருமையையும் ரோஹித் பெற்றுள்ளார்.
- உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் **ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் கேப்டன் இயன் மோர்கன் 17 சிக்ஸர்களை** பறக்கவிட்டு சாதனை படைத்தார். அவரது அதிரடியால் இங்கிலாந்து அணி **397 ரன்கள்** குவித்தது.
- உலகக் கோப்பை வரலாற்றில் **இங்கிலாந்து அணியின் அதிகபட்ச ரன் குவிப்பாக** இது அமைந்தது.
- தனது **13-வது சதத்தை விளாசிய** கேப்டன் **இயன் மோர்கன்** 71 பந்தில், 17 சிக்ஸர், 4 பவுண்டரிகளுடன் **148 ரன்கள்** விளாசிய நிலையில் குல்பாதின் நயிப் பந்தில் ஆட்டமிழந்தார். மோர்கன் **57 பந்துகளில்** சதம் விளாசியிருந்தார். உலகக் கோப்பை வரலாற்றில் **அதிவிரைவாக அடிக்கப்பட்ட 4-வது சதம்** இதுவாகும்.
- 2019 ஆம் ஆண்டின் எப்ஐஎப்எ (FIFA) **பெண்கள் உலகக் கோப்பைக்கான** அதிகாரப் பூர்வ சின்னம் **"எட்டி"** என்று பெயரிடப்பட்டுள்ளது.

- இந்த ஆட்டத்தில் 17 சிக்ஸர்களை விளாசியதன் மூலம் **ஒரு இன்னிங்ஸில் அதிக சிக்ஸர்களை விளாசியிருந்த** இந்தியாவின் **ரோஹித் சர்மா** (எதிரணி ஆஸ்திரேலியா), தென் ஆப்பிரிக்காவின் **ஏபி டி வில்லியர்ஸ்,** மேற்கிந்தியத் தீவுகளின் **கிறிஸ் ஹெயில்** (எதிரணி ஜிம்பாப்வே) ஆகியோரது கூட்டுச் சாதனையை முறியடித்தார் **இயன் மோர்கன்.**
- அயர்லாந்தின் டப்ளினில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் அயர்லாந்தை வெற்றி பெற்றதன் மூலம் **இந்திய ஜீனியர் மகளிர் ஹாக்கி அணி காண்டர் ஃப்ட்ஸ்ஜெரால்ட் U21** (Cantor Fitzgerald U21) சர்வதேச பட்டத்தை வென்றது.
- எட்டாவது பெண்கள் உலக கோப்பை கால்பந்து போட்டி (FIFAWomen's World Cup) **பிரான்ஸ் நாட்டில்** நடந்து வருகிறது.
- மகளிர் டி20 கிரிக்கெட்டில் **வாண்டா** அணிக்கு எதிரான ஆட்டத்தில் **வெறும் 6 ரன்களுக்கு ஆட்டமிழந்து** மோசமான சாதனையை மாலி அணி படைத்துள்ளது. இதன் மூலம் **டி 20 அரங்கில் ஒற்றை இலக்க ரன்னில் ஆட்டமிழந்த முதல் அணி** என்ற மோசமான சாதனையை மாலி அணி படைத்துள்ளது.
- ஸ்வீடனின் சோலேன்டுனா நகரில் நடைபெற்ற **போல்க்சாம் கிராண்ட்பிரீ தடகளப்** போட்டியின் மகளிர் **1500 மீட்டர்** பிரிவில் இந்திய வீராங்களை **பி.யு.சித்ரா தங்கம்** வென்றுள்ளார்.
- ஒருநாள் கிரிக்கெட்டில் **8 ஆயிரம் ரன்களை விரைவாக கடந்த 2-வது வீரர்** என்ற பெருமையை **ஹசிம் ஆம்லா** பெற்றுள்ளார். அவர், **176 இன்னிங்ஸில்** இந்த மைல்கல்லை எட்டியுள்ளார். இந்த வகையில் **விராட் கோலி 175 இன்னிங்ஸில்** 8 ஆயிரம் ரன்களை கடந்து **முதலிடத்தில்** உள்ளார்.
- **சீனியர் ஆசிய ஆர்ட்டிஸ்டிக் ஜிம்னாஸ்டிக்** சாம்பியன்ஷிப் போட்டியில் **வால்ட் பிரிவில்** இந்திய வீராங்கனை **பிரணதி நாயக்** வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.
- இந்திய தடகள வீராங்கனையான **சஞ்சீவனி ஜாதவ்** கடந்த ஆண்டு நடத்தப்பட்ட **ஊக்கமருந்து சோதனையில்** தோல்வியடைந்ததை அடுத்து, தற்போது **இடைநீக்கம்** செய்யப்பட்டுள்ளார்.
- மணிலாவில் நடைபெற்ற **சர்வதேச ரக்பி சாம்பியன்ஷிப்** போட்டியில் இந்திய **மகளிரணி** சிங்கப்பூரை 21-19 என்ற புள்ளிகள் கணக்கில் வென்று **3-ஆம் இடம்** பிடித்தது.
- ஹாலே ஓபன் டென்னிஸ் போட்டி இறுதிச் சுற்றில் **டேவிட் கோபினை** வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார் **ரோஜர் பெடரர்.** இது அவர் கைப்பற்றும் **10-ஆவது ஹாலே** பட்டமாகும்.
- **எப்ஐஎச் மகளிர் ஹாக்கி சீரிஸ் பைனல்ஸ்** போட்டியில் **இந்தியா சாம்பியன்** பட்டம் வென்றது.
- இந்த வெற்றி மூலம் **இந்தியாவும்,** இரண்டாம் இடம் பெற்றதால் **ஜப்பானும்** ஒலிம்பிக் தகுதிச் சுற்று **போட்டிக்கு தேர்வாகி** உள்ளன.
- பர்மிங்ஹாம் டபிள்யுடிஏ டென்னிஸ் போட்டியில் பட்டம் வென்றதின் மூலம் **முதன்முறையாக உலகின் நம்பர் ஒன் வீராங்கனை அந்தஸ்தை** கைப்பற்றியுள்ளார் ஆஸி. வீராங்கனை ஆஷ்லி பர்டி.
- **2021 முதல் 2031** வரையிலான காலத்தில் **ஒலிம்பிக் போட்டிகளுக்கு இணை ஸ்பான்ஸர்களாக கோக-கோலா,** மற்றும் சீன பால் உற்பத்தி நிறுவனமான **மேங்னியு** ஆகியவை சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- டெஸ்ட், ஒருநாள், டி20 என அனைத்து வகையான சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களிலும் **துரிதமாக 20 ஆயிரம் ரன்களை குவித்த வீரர்** என்ற புதிய உலக சாதனையை படைத்துள்ளார் **கேப்டன் விராட் கோலி.** இதன் மூலம் **லாரா, சச்சின்** ஆகியோரின் முந்தைய சாதனைகளையும் முறியடித்துள்ளார்.
- லாரா, சச்சின் ஆகியோர் **453 இன்னிங்ஸ்களில்** 20,000 ரன்களை துரிதமாக கடந்தவர்கள் என்ற சாதனையை படைத்திருந்தனர். ஆனால் கோலி வெறும் **417 இன்னிங்ஸ்களில்** இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார்.
- உலகக் கேப்பை கிரிக்கெட் தொடரில் **மேற்கிந்தியத் தீவுகள்** அணிக்கு எதிரான ஆட்டத்தில் **இந்திய அணி 125 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.**

- மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக கேப்டன் விராட் கோலி அரை சதம் எடுத்தார். இதன் மூலம் **உலகக் கோப்பை வரலாற்றில் தொடர்ச்சியாக 4 முறை 50-க்கும் மேற்பட்ட ரன்களை சேர்த்த** 3-வது **கேப்டன்** என்ற பெருமையை பெற்றார் **விராட் கோலி.**
- மேலும் 20 ஆயிரம் ரன்களை கடந்த **3வது இந்திய வீரர்** என்ற பெருமையையும் பெற்றுள்ளார் விராட் கோலி.
- தேசிய கிரிக்கெட் அகாடமி **(என்சிஏ) தலைவராக** இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் **ராகுல் திராவிட்** (ஜூலை 1) பொறுப்பேற்றுள்ளார்.
- எந்தவொரு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளையும் நடத்துதல் மற்றும் அவற்றிற்கு ஆதரவளித்தல் தொடர்பாக **இந்தியாவின் மீது விதிக்கப்பட்ட அனைத்துத் தடைகளையும் சர்வதேச** ஒலிம்பிக் குழு (IOC – International Olympic Committee) நீக்கியுள்ளது.
- ஜெர்மனியில் நடைபெற்றுவரும் **உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல்** போட்டியில், மகளிர் பிரிவு ஆட்டத்தில், 10 மீட்டர ஏர் பிஸ்டல் பிரிவில் **4 ஆவது இடம் பிடித்து 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கும்** தகுதி பெற்றார் இந்திய இளம் வீராங்கனை மானு பேக்கர்.
- சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் ஐசிசி சார்பில் 12-ஆவது ஐசிசி **ஒருநாள் உலகக் கோப்பை போட்டி 2019 லண்டன் கென்னிங்டன் ஓவல் மைதானத்தில்** கோலாகலமாகத் தொடங்கியது.
- உலகக்கோப்பை 2019 போட்டியை முன்னிட்டு கிரிக்கெட் மெக்கா எனப்படும் **லண்டன் லார்ட்ஸ்** மைதானத்தில் இந்திய கேப்டன் **விராட்கோலியின்** மெழுகு சிலை நிறுவப்பட்டுள்ளது.
- அஜர்பைஜான் தலைநகர் பாகுவில் இரவு நடைபெற்ற ஐரோப்பா லீக் கால்பந்து போட்டி இறுதி ஆட்டத்தில் **செல்ஸி அணி சாம்பியன் பட்டம்** வென்றது.
- கிரிக்கெட் ஜாம்பவான் **சச்சின்டெண்டுல்கர்** முதன்முறையாக உலகக் கோப்பை போட்டியில் **வர்ணனையாளராக** நியமிக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்து - தென்னாப்பிரிக்கா இடையிலான தொடக்க ஆட்டத்தில் அவர் இப்பொறுப்பை மேற்கொண்டார்.
- ஐசிசி ஒருநாள் உலகக் கோப்பை தொடக்க ஆட்டத்தில் **தென்னாப்பிரிக்க அணியை** 104 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி **இங்கிலாந்து அபார வெற்றி** பெற்றது.
- உலகக் கோப்பை போட்டியில் **முதல் ஓவரை வீசிய முதல் சுழற்பந்து வீச்சாளர்** என்ற சாதனையை தென்னாப்பிரிக்காவின் **இம்ரான் தாஹிர்** நிகழ்த்தினார்.
- ISSF **உலக கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி** (ISSF World Cup in Munich 2019), ஜெர்மனியின் முனிச் நகரில் நடைபெற்றது.
- 5 தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளிப்பதக்கத்துடன் **பதக்கப்பட்டியலில் இந்தியா முதலிடம்** பெற்றுள்ளது.
- தேசிய சதுரங்கப் போட்டிகளின் **அனைத்துப் பிரிவுகளிலும் ஒரே சமயத்தில் வெற்றியாளராக** இருப்பவர் என்ற தனிப்பெரும் சாதனையினை **அரவிந்த் சிதம்பரம்** பெற்றுள்ளார்.
- இவர் சமீபத்தில் ஜலந்தரில் நடைபெற்ற **தேசிய அளவிலான போட்டிகளில் ரேபிட் மற்றும் பிலிட்ஸ்** பிரிவுகளில் பட்டங்களை வென்றுள்ளார்.
- ஆண்கள் உலகக் கோப்பை கிரிகெட் போட்டிகள் துவங்கியதையடுத்து **கிரையோ (CRIIO)** என்ற ஒரு பிரச்சாரத்தை சர்வதேச கிரிக்கெட் ஆணையம் துவங்கியுள்ளது.
- கிரையோ என்பது ஒவ்வொருவரும் **அவரவர் இருக்கும் இடத்தில் அவரவர் வழியில் கிரிக்கெட்** விளையாடுவதைக் கொண்டாடுகிறது.
- குடியாத்தத்தில் கே.எம்.ஜி. கல்லூரியில் 5 நாள்கள் நடைபெற்ற தேசிய அளவிலான சப்-ஜூனியர் வலுதூக்கும் போட்டிகளில் **தமிழ்நாடு ஆண்கள் பிரிவு சாம்பியன் பட்டம்** வென்றுள்ளது.
- வரும் **2022-ஆம் ஆண்டில் ஏ.எப்.சி மகளிர் ஆசிய கோப்பை கால்பந்து** போட்டியை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளது இந்திய கால்பந்து சம்மேளனம்.
- கஜகஸ்தானில் நடைபெற்ற 20 வயதுக்கு உள்பட்டோருக்கான தடகளப் போட்டியில் குன்னூரைச்சேர்ந்த தடகள வீரர் **ஸ்ரீகிரண் தங்கப் பதக்கம்** வென்றுள்ளார்.
- உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் **அதிக சிக்சர் (40 சிக்சர்கள்) அடித்த வீரர்** என்ற சாதனையை **கிறிஸ் கெய்ல்** படைத்துள்ளார்.
- இங்கிலாந்து வீரர் **கிறிஸ்வோக்ஸ்,** உலகக் கோப்பை வரலாற்றில் ஒரே ஆட்டத்தில் **4 கேட்ச்சுகளை பிடித்த இங்கிலாந்து வீரர்** என்ற சிறப்பை பெற்றுள்ளார்.

# முக்கிய தினங்கள்

- உலக பால் தினம் - **ஜீன் 1**
- உலக பெற்றோர் தினம் - **ஜீன் 1**
- தெலங்கானா உதய தினம் - **ஜீன் 2**
- உலக சைக்கிள் தினம் - **ஜீன் 3**
- சர்வதேச ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அப்பாவி குழந்தைகள் தினம் - **ஜுன் 4**
- ஜுன் 5 : உலக சுற்றுச்சூழல் தினம். - **மையக்கருத்து: காற்று மாசை ஒழிப்போம் (Beat Air Pollution)**
- ஜுன் 6 : இரஷ்ய மொழி தினம்
- தமிழ் மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்ட நாள் - ஜுன் 6
- ஜுன் 7 : உலக உணவு பாதுகாப்பு தினம்.
  மையக்கருத்து: **'உணவு பாதுகாப்பு அனைவருக்குமான வணிகம்' (Food Safety, Everyone's Business)**
- உலக மூளைக் கட்டி தினம் - ஜுன் 08
- சர்வதேச வெளிறல் (அல்பினிசம்) விழிப்புணர்வு தினம் - ஜுன் 13
- இந்த ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, "இன்னும் உறுதியுடன் எழுந்து நில்" என்பதாகும்.
- ஜுன் 12 - குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான சர்வதேச தினம் (மையக் கருத்து : Children Shouldn't work in fields, but on dreams)
- உலக ரத்த தான தினம் - ஜுன் 14 (Theme: 'Safe blood for all')
- உலக முதியோர் வன்கொடுமை ஒழிப்பு விழிப்புணர்வு தினம் - ஜுன் 15
- உலகம் முழுவதும் ஜுன் மாதம் **மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை** (ஜுன் 16, 2019), **உலக தந்தையர் தினம்** கடைபிடிக்கப்படுகிறது.
- பாலைவனமாதல் மற்றும் வறட்சிக்கு எதிரான தினம் - ஜுன் 17 **(Theme): 'Let's Grow the Future Together'.**
- நீடித்த அறுசுவை உணவியல் தினம் - ஜுன் 18
- சர்வதேச சுற்றுலா தினம் - ஜுன் 18
- உலக அகதிகள் தினம் - ஜுன் 20 (Theme: #Step With Refugees – Take a Step on World Refugee Day)
- 2019 ஆம் ஆண்டிற்கான சர்வதேச யோகா தின மையக்கருத்து: 'காலநிலை நடவடிக்கை' (Climate Action) என்பதாகும்.
- சர்வதேச யோகா தினம் - ஜுன் 21
- உலக நீர்நிலையியல் தினம் - **ஜுன் 21**
- **ஜுன் 25** - சர்வதேச மாலுமிகள் தினம் & உலக வெண்புள்ளி தினம்
- **ஜுன் 26** - உலக போதைப் பொருள் ஒழிப்பு தினம் & சித்திரவதைக்கு உள்ளானவர்களின் சர்வதேச ஆதரவு தினம்
- **ஜுன் 27 -** குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தினம்
- **ஜுன் 29 -** தேசிய புள்ளியியல் தினம் & சர்வதேச வெப்பமண்டல காடுகள் தினம்
- **ஜுன் 30 -** உலக நாடாளுமன்ற தினம்

# புத்தகங்கள்

- **ஆஷிஷ் ரே** என்பவர் **"கிரிக்கெட் உலகக்கோப்பை: இந்தியாவிற்கான சவால்"** என்ற ஒரு புதிய புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
- எடை இழப்புக்கான யோகா மற்றும் உணவு என்ற பெயரில், **"Yoga and Diet for Weight Loss"** என்ற புத்தகத்தை பிரபல ஒருங்கிணைந்த யோகா சிகிச்சையாளர் **'பிஜோய்லக்ஷ்மி ஹோடா'** (Bijoylaxmi Hota) எழுதியுள்ளார்.